உ

சிவமயம்

# சைவநீதி

# SAIVANEETHI




| மலர் 9 | பார்த்திப - வைகாசி | May - June 2005 | இதழ் 02 |
|---|---|---|---|




ரூபா 25/=

# பொருளடக்கம்


பக்கம்

1. பயன் தரும் பதிகங்கள் .................................... 2

2. சைவபூஷணம் தமிழ் விளக்கம் .................................... 3

3. பூரணத்தொட்டி .................................... 6

4. உருத்திர மூர்த்தியும் உருத்திரர்களும் ஒருவர் அல்லர் .......... 9

5. சிவஞானபோதம் .................................... 14

6. SAIVA DOCTRINE FOR LIFE AS SHOWN BY APPAR ADIKAL 21

7. மௌனகுரு .................................... 23

8. நாவலர் பெருமான் சிரமேற் கொண்ட மேன்மைகொள் சைவநீதி.. 26

11. சந்தேகம் தெளிதல் .................................... 28



சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

- இதழ் நிர்வாகிகள்

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"




# சைவநீதி

மலர் 9 பார்த்திப - வைகாசி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 02



**தொடக்குனர்:**
கலாபூஷணம், ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி, வித்துவான்,
**திரு. வ. செல்லையா**

**மதியுரைஞர்:**
**சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

**திரு. D. M. சுவாமிநாதன்**
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

**திரு. அ. கந்தசாமி**
*Chairman U.P.S.*

**திரு. கு. மகாலிங்கம்**

**பதிப்பாசிரியர்:**
**திரு. வே. திருநீலகண்டன்**
லக்ஷ்மி அச்சகம்

**விநியோகம்:**
**திரு. க. சீனிவாசகம்**
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி



**நிர்வாக ஆசிரியர்:**
**திரு. செ. நவநீதகுமார**
30, ரம்யா ரோட், கொழும்பு-04.

தொடர்புகட்கு: *7.30 p.m. to 7.30 a.m.*

தொலைபேசி: 2‘80458


# உயிர்ப்பலி

**'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்ணாமை நன்று'** என்றார் திருவள்ளுவர்.

சமயங்கள் எல்லாம் உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் என்று போதிக்கின்றன. உயிர்க்கொலை பஞ்சமாபாதகத்தில் ஒன்று கொலை செய்யாது புலால் உண்ணாது இருக்கும் ஒருவரை உயிர்கள் கை கூப்பித் தொழும். இன்று கை கூப்பித் தொழும் ஆலயங்கள் சிலவற்றில் **'உயிர்ப்பலி'** என்னும் கொடிய பாதகச்செயல் நடைபெறுகின்றது.

விஞ்ஞானத்தால், அறிவால், நாகரீகத்தால் வளர்ச்சி அடைந்த இக்காலத்திலும் மூடக்கொள்கைகளும் அறியாமையும் நிரம்பி இருப்பது வேதனைக்குரியது. ஒரு சிலரின் செயலால் எமது சமயத்தையே புற சமயத்தவர் கேலி செய்யும் நிலை. கொல்லாமற் கொன்றதைத் தின்னாமல் இருக்க வேண்டும் என்று சான்றோர் போதித்து உள்ளனர். **'தவிர்க்க வேண்டிய உயிர்க்கொலை ஆலயத்தில் செய்வது கொடியசெயல்'** என்று கூறவும் வேண்டுமோ?

ஒரு தாய் தான் பெற்ற பிள்ளைகள் அனைவரிலும் பிரியம் வைத்திருப்பாள். ஏதாவது குறை (அங்கவீனம்) உள்ள பிள்ளை என்றால் மற்றவர்களைவிட அப்பிள்ளைமீதுதான் தாய்க்கு அதிக அன்பு இருக்கும்.

அனைத்து உயிர்களும் இறைவனாற் படைக்கப்பட்டவை. இதிலே மனிதன் உயர் நிலையில் உள்ளவன். மிருகங்கள் வாய் பேசமுடியாதவை. இறைவன் முன்னிலையிலே உயிர்க்கொலை செய்தால் இறை கோபத்திற்கு ஆளாவர். கொலை செய்வோரும் செய்விப்போரும் உடந்தையாயிருப்போரும் மீளாத்துயருறுவர்.

தக்க இன்னது தகாதது இன்னது என்று அறிந்து செயற்பட முடியாவிட்டால் சட்டமூலமாவது உடனடியாக ஆலயங்களில் நடைபெறும் உயிர்ப்பலி தவிர்க்கப்பட வேண்டும்.

# பயன் தரும் பதிகங்கள்

**திருஞானசம்பந்தர்**

நல்வாழ்விற்கு வேண்டியனவற்றைப் பெற்றுக் கொள்ளவும், இம்மை மறுமை இன்பம் பெறவும் இப்பதிகத்தை ஓதிப் பலன் பெறலாம்

**மூன்றாம் திருமுறை** **திருச்சிற்றம்பலம்** **பண் - காந்தார பஞ்சமம்**

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 2

ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே. 5

தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. 6

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாள்தொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன அஞ்செ ழுத்துமே. 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன அஞ்செ ழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன அஞ்செ ழுத்துமே. 9

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமில் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. 11

**திருச்சிற்றம்பலம்**

சென்ற இதழின் தொடர்ச்சி.....

# சைவபூஷணம்
# தமிழ் விளக்கம்

சாம்பமூர்த்தியாகிய பரமசிவனது பத்தர்களினுடைய அடையாளங்கள் வருமாறு. விபூதி தரித்தல், திரிபுண்டரந்தரித்தல், உருத்திராக்கத்தை ஆபரணமாகத் தரித்தல், சடை முதலியன வளர்த்தல். எல்லாவற்றிற்குஞ் சிவபெருமானே கருத்தா என்னும் சிவகதையின் மான்மியத்தைக் கூறுதல். சிவபெருமானைத் துதிக்குந் தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டு நடனஞ்செய்தல், திருவைந்தெழுத்தை உச்சரித்தல், காவியாடை வெண்மையான ஆடைதரித்தல், சிகாச்சேதஞ் செயதல் முன்னர் கூறியவாறு சிவமுத்திரைகளைத் தரித்தல், ஆகம முதலிய சிவசாத்திரங்களைப் படித்தல், தேவாரபாராயணஞ்செய்தல், தினந்தோறுஞ் சிவாலயவழிபாடு செய்தல், சிவபணி விடைகளிலன்பு வைத்தல், சிவபெருமான் ஆளுபவன் நான் அவருக்கு அடிமையென்றெண்ணுதல், சிவனடியார்களை வணங்குதல், அவர்களை அருச்சித்தல், சிவபெருமானைப் பூசித்தல், எல்லா உயிர்களுக்கும் உபகாரஞ்செய்தல், எல்லா உயிர்களிடத்தும் எப்பொழுதுங் கருணையுடனிருத்தல், எவரிடத்தும் முகமலர்ச்சியுடன் பேசுதல், எப்பொழுதுஞ் சிவபெருமானுக்குடபட்டு அடங்கியிருத்தல், ஒட்டியாணத்தினுமேம்பட்ட யோகபட்டந்தரித்தல், கட்வாங்கரூபமான மாத்திரைக்கோலுடையராதல், குருமொழியில் நம்பிக்கை, சாத்திரத்திற் கூறியவாறனுட்டித்தல், கையில் பிக்ஷா பாத்திரம் ஜபவஸ்திரமென்னுமிவைகளைத் தரித்தல், பிக்ஷையெடுத்துண்ணுதல், தன்னைரக்ஷித்தல், தன்னோடு பிரிப்பின்றி விளங்கும் பரமான்ம சொரூபத்தையறிதல், சிவபெருமான். சூரியன், விநாயகர் ஆகிய இவர்களைப் பூஜித்தல், சுப்பிரமணியரைப் பூஜித்தல், பார்வதியை யருச்சித்தல், அக்கினிகாரிய முதலியன செய்தல், எப்பொழுதுஞ் சிவனடியாரோடு கூடியிருத்தல், இவையனைத்துஞ் சிவனடியாருக்குரிய அடையாளங்களென அறிந்து கொள்க.

(அ-கை) சிவபத்தர்களாவார் தனியடியார்கள் அறுபத்துமூவர், தொகையடியார் ஒன்பதின்மரென எழுபத்திரண்டு பெயரென்றும், அவர்களுடைய பெயர்களிவையென்றும் இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

தனியடியார் அறுபத்து மூவராவர். அவருள், சிவப்பிராமணர் நால்வர். மகாப்பிராமணர் பன்னிருவர். மருத்துவப் பிராமணர் ஒருவர். ஆகப்பிராமணரில் பதினேழுபெயர், முடிமன்னரறுவர். குறுநில மன்னரைவர். வணிகர் ஐவர். வேளாளர் பதின்மூவர். இடையரிருவர். குயவர், பரதவர், சாலியர், மறவர், பாடுவோர், சாணார், வண்ணார், வாணியர், கடையர் என்னுமிவர்களில் ஒவ்வொரு வர். மரபறியாதவர் அறுவர். ஆக அறுபத்து மூவர் தொகை இவ்வாறு கண்டுகொள்க. இவர்களின் பெயர் வருமாறு :- சுந்தரமூர்த்தி நாயனார், சடையனார், இசைஞானியர், புகழ்த்துணையாரென சிவப்பிராமணர் நால்வர். குங்குலியக்கலயநாயனார், முருக நாயனார், உருத்திரபசுபதியார், சண்டேஸ்வரர், அப்பூதியடிகள், திருநீலநக்கர், நமிநந்தியடிகள், திருஞானசம்பந்தப் பெருமான், சோமாசிமாறர், சிறப்புலியார், கணநாதர், பூசலாரென மகாப்பிராமணர் பன்னிருவர். மருத்துவப் பிராமணர் சிறுத்தொண்டரொருவர். சேரமான்பெருமாள், புகழ்ச்சோழர், இடங்கழியார், நின்றசீர் நெடுமாறர், மங்கையர்க்கரசியார், கோச்செங்கட்சோழர் என முடிமன்னரறுவர். மெய்ப்பொருணாயனார்,

**கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்டது அமைச்சு** 631

செயலுக்குத் தேவையான கருவியும் அதற்கு ஏற்ற காலமும், அதைச் செய்யும் வழி வகையும், அவ்வகையில் செய்யும் அரிய செயலும் சிறப்பாகச் சிந்திக்க வல்லவனே அமைச்சன் ஆவான்.

கூற்றுவனார், நரசிங்கமுனையர், ஐயடிகள், காடவர்கோன் நாயனார், கழற்சிங்கநாயனாரெனக் குறுநில மன்னரைவர், காரைக்காலம்மையார், மூர்த்திநாயனார், கலிக்கம்பர், அமர்நீதியார், இயற்பகையாரென வணிகரைவர். இளையான்றன்குடிமாறர், விறன்மிண்டர், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், திருநாவுக்கரசர், ஏயர்கோன் கலிக்காமர், மூர்க்கனார், சாக்கியர், சுத்தியார், வாயிலார், முனையடுவார், சிறுத்துணையார், கோட்புலியாரென வேளாளர் பதின்மூவர். ஆனாயர், திருமூலரென இடையரிலிருவர், குயவரில் திருநீலகண்டரொருவர். சாணாரில் ஏனாதியரொருவர். வண்ணாரில் திருக்குறிப்புத்தொண்டரொருவர். வாணியரில் கலியரொருவர். கடையரில் திருநாளைப் போவாரொருவர். எறிபத்தர், குலச்சிறையார், பெருமிழலைக்குறும்பர், தண்டியடிகள், கணம்புல்லர், காரியாரென மரபறியாதவரறுவர். இவ்வாறு அறுபத்துமூவர் திருநாமங் கண்டுகொள்க.

தொகையடியார் ஒன்பதின்மரெவரெனில், தில்லைவாழந்தணர் மூவாயிரவர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப்பணி திருவாரூர்ப் பிறந்தார். முப்போதுந் திருமேனி தீண்டுவார்கள். இவ்வாறு சிவபக்தர்களாகிய தன்னடியார் மரபறியடியார்களின் தொகையும் பெயருங் கண்டுகொள்க.

சூரணோத்சவவிதி பதின்மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

ஆலயங்களில் திருவிழா முடிந்து சுவாமி தீர்த்தங் கொடுக்குந் தினத்திலும், தீக்ஷையுடையவன் மரணமடைந்த பின்னர் அவனுக்கும் சூர்ணோத்சவஞ்செய்ய வேண்டும். மங்களத்திற்காகவே இந்தக் கிரியை செய்யப்பட வேண்டுமென்று சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. கிரியாவிதி வருமாறு:- சிவதீக்ஷையுடையவன் மரணமடைந்தபின் பிரேதஞ்சுத்தியடையும் பொருட்டுக் கிரியை செய்யுங் கருத்தா கழுத்திற்குமேல் சௌளஞ் செய்துகொள்ளல் வேண்டும். இவ்வாறு வாதுளாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. பின்னர் ஸ்நாநஞ்செய்தவர்களால் புதிதாகக் கொண்டுவரப்பட்ட ஜலம் தயிர் முதலியவற்றால் பிரேதத்தை ஸ்நானம் செய்து வைத்துக் கட்டில் அல்லது பாயில் தெற்கே தலையாகப் படுக்க வைத்து விபூதி தரிக்க வேண்டும். அதன்பின் பிரேதத்திற்குக் கிழக்கில் ஒரு முழத்தில் வேதிகையும், அந்த வேதிகைக்குக் கிழக்கில் இரண்டு முழத்தில் எட்டுத்துரோணங்கள் கொண்ட தானியங்களால் வேதிகையும், அதற்குக் கிழக்கில் நெல்லின் பாதியில் பாதியுள்ள அரிசி எள்ளு இவைகளால் ஒருமண்டலமுமிடவேண்டும். (துரோணமென்பது இரண்டு மரக்கால்) பின்னர் கும்பம் உரல் பேரி என்னுமிவைகளை அம்மூன்றிலும் முறையே பரிஜனங்களைக் கொண்டு ஸ்தாபிக்கச் செய்ய வேண்டும். மேற்குத் திக்கிலுள்ள மண்டலத்தில் ரேகையினால் பத்மங்கீறி அதன் மத்தியில் கும்பத்தை ஸ்தாபிக்க வேண்டும். இந்தக் கும்பத்தினுடைய நான்கு பக்கங்களிலும் கிழக்கு முதற்கொண்டு முறையே அப்பிரதக்ஷணமாக விபூதி கௌபீனம் தாம்பூலம் தைலம் இவைகளை ஸ்தாபிக்க வேண்டும். இந்த முறையின்றிச் செய்யின் பலன் தராது. இவ்வாறு செய்தற்குக் காரணம் காரணாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. கும்பத்திலிருக்கும் அஸ்திரதேவரைத் தியானஞ்செய்யுமுறை வருமாறு:- பயங்கரமான வேஷத்துடன் மூன்று கண்களை உடையவராயும் பொன்னிறமாயும் மேல்நோக்கி விளங்குகிறதாயுமுள்ள ஜடையையுடையவராயும், சட்கம் அக்ஷசூத்ரம் கதை கேடம் இவைகளை நான்கு கைகளிலும் தரித்துக் கொண்டிருக்கிறவராயும், சிவந்த திருமேனியையுடையவராயும் தியானிக்க வேண்டும். பின்னர் விபூதி முதலியவற்றில் இந்திரன் குபேரன் வருணன் யமன் என்னுமிவர்களைத் தியானிக்க வேண்டும். பின்னர் நைவேத்திய முதலியன சமர்ப்பித்துத் தூபம், தீபம், நிரோதார்க்கியங் கொடுத்து தேவரீர் இங்கே சிறிது நேரமிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்து அதன் பின்னரெழுந்திருந்து அர்க்கிய பாத்திரத்தைக்

வன்கண் குடிகாத்தல் கற்றுஅறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு 632

மனவுறுதியும் நற்குடிப்பிறப்பும் குடிகளைக் காத்தலும், அற நூல்களையும் அரசியல் நூல்களையும் கற்று வேண்டுவன விலக்குவன அறிதலும், விடா முயற்சியோடு கூடிய ஐந்தும் ஒரு சேரச் சிறப்பாக அமையப் பெற்றவனே அமைச்சன் ஆவான்.

கையில்வைத்துக்கொண்டு குருவானவர் பேரிகையைப் பூசிக்க வேண்டும். அந்தப் பேரிகை இடையே ஆடையால் சுற்றப்பட்டதாயிருக்க வேண்டும். அதனை உசிதம்போல் வைத்துக்கொண்டு அதன் மத்தியிலும் இரு பக்கங்களிலும் உருத்திரர் பிரமன் விஷ்ணு இவர்களையும், ஏழுவார்க் கட்டுகளில் சப்தமாதர்களையும், வலதுபக்கம் இடதுபக்கமான இரண்டு வட்டங்களில் சந்திர சூரியர்களையும், கயிற்றில் நாகங்களையும் மூலையில் ஸ்கந்தரையும் பூஜிக்க வேண்டும். பேரிதேவதையின் தியானஞ் சித்தாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:-

சுத்தராயும், மூன்று முகமுள்ளவராயும், உயர்ந்தவராயும், ஆறுகைகளையுடையவராயும், மூன்று கால்களையுடையவராயும், செவ்வரத்தம் பூவிற்குச் சமானமான நிறத்தையுடையவராயும், சங்கம் சக்கரம் கதை ஜபமாலை சூலம் பரிசு இவைகளைத் தரித்திருப்பவராயும், தாமரையில் வீற்றிருப்பவராயும், தன்னுடைய நாதமாகிய கிரீடத்தையுடையவராயுந் தியானிக்க வேண்டும். இவ்வாறு தியானித்து அஸ்திர மந்திரத்தால் பேரி தாடனம் பண்ண வேண்டும். பின்னர் உரலுக்குப் பூசை செய்ய வேண்டும். உரலின் கீழ்ப்பாகத்தில் ஆதாரசத்தியைப் பூஜிக்க வேண்டும். நடுப்பாகத்தில் பிரமாவையும், மேற்பாகத்தில் விஷ்ணுவையும், உரலின் குழியில் பூமாதேவியையும், உலக்கையில் மேருவையும், மஞ்சட்பொடியில் பிருதிவி தத்துவத்தையும் பூஜித்து உரலின் மத்தியில் மஞ்சட் பொடியை வைத்துச் சிவதீக்ஷையுடைய தாசி ஜனங் [illegible] ஆசாரியார் அந்த உலக்கையைப் பிடித்துக்கொண்டு பத மந்திரத்தை உச்சரித்து மூன் [illegible] பொடி செய்ய வேண்டும். அதன்பின் தமிழ் மறையை ஓதி உத்தாபனஞ்செய்து கும்பஜலத்தால் பிரேதத்திற்குப் புரோக்ஷணஞ்செய்தல் தைலம் மஞ்சட் பொடி இவைகளையிடுதல் முதலியன செய்ய வேண்டும். இவையனைத்துஞ் சூர்ணோத்சவமாகும். இதுவன்றி, பேரிகையை அடிக்கும்பொழுது கீழ் வருமாறு சொல்லிக்கொண்டு ஆசிரியன் அடிக்க வேண்டும். அஃதாவது சிவதீக்ஷிதனாயிருக்கிற இவன் இறந்ததினிமித்தமாகச் செய்யப்படும் இந்த சூர்ணோத்சவத்தில் சமஸ்தமான பிசாசுகளும் பறந்தோடும் பொருட்டு ஆசாரியரான யான் அஸ்திர மந்திரத்தால் மூன்றுமுறை இப்பொழுது தாடனஞ்செய்கின்றேன். ஈஸ்வர சம்பந்தமான அடியார்களும் மற்றவர்களும் வருதற் பொருட்டும் வீட்டிலிருக்கும் அந்தத் தேவதைகளின் துக்கம் நீக்குதற் பொருட்டும் நான் இப்பொழுது பேரிதாடனஞ் செய்கின்றேன். சிவதீக்ஷிதனாகிய இவன் பூவுலகசஞ்சாரத்தை நீக்கிப் பாரமார்த்திகமான சுகத்தை அனுபவிக்கும் பொருட்டுச் சிவலோக யாத்திரை சென்றுவிட்டான். இது ஒரு புதிதான மங்கலம் ஆதலால் இப்பொழுது பேரி தாடனஞ்செய்கின்றேன். இவ்வாறு சொல்லிக்கொண்டு மூன்றுமுறை பேரி தாடனஞ் செய்ய வேண்டுமென்க.

சூரணோத்சவ முறையைச் சுருக்கி ஒரு சுலோகத்தாற் கூறுகின்றார்.

இறந்தவனுக்குச் சூரணோத்ஸவக்கிரியை செய்யுமுறை வருமாறு:- முதலாவது கும்பபூஜை செய்தல். பின்னர்க் கிழக்கு முதல் அப்பிரதக்ஷிணமாகக் கிழக்கு வடக்கு மேற்கு தெற்கு என்னும் நான்கு திக்குகளினும் திருநீறு, கௌபீனம், வெற்றிலை, பாக்கு, நல்லெண்ணை என்னுமிவைகளைப் பாத்திரங்களில் வைத்துப் பூசித்தல், அந்த விபூதி முதலியவற்றில் அந்த அந்தத் திக்குப்பாலகர்களைப் பூசித்தல், பின்னர் பேரிதாடனஞ் செய்தல், பின்னர் சூரணம் இடித்தல், பின்னர்ப் பிரேதத்திற்குக் கும்பஜல முதலியவற்றால் அபிஷேகஞ் செய்தல். இவ்வாறு சூரணோத்ஸவக்கிரியையின் முறை அறிந்துகொள்க.

(அடுத்த இதழில் தொடரும் ..............)

**பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்**
**பொருத்தலும் வல்லது அமைச்சு** 633

பகைவரின் துணைவரை அவரிடத்திலிருந்து பிரிப்பதும், தம் துணைவரைத் தம்மிடத்திலிருந்து பிரியாதபடி பேணிக் கொள்ளுவதும், முன்பு தம்மிடமிருந்து பிரிந்து போனவரை மீண்டும் சேர்த்துக் கொள்ளுவதும் வல்லவனே அமைச்சன் ஆவான்.

# பூரணத்தொட்டி

முருகவே பரமநாதன்

**பூரண ஞானம் பொலிந்தநன் நாடு**
**புத்தர் பிரானருள் பொங்கியநாடு**
**பாரத நாடு பழம்பெரு நாடே**
**பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே**

பாரதி கவிதைகள் 6 எங்கள் நாடு 2

**நாமிருக்கும் நாடு நமதுஎன்ப தறிந்தோம் இது**
**நமக்கே உரிமையாம் என்ப தறிந்தோம் - இந்தப்**
**பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் - பரி**
**பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்**

மேலது 31 சுதந்தரப் பள்ளு 5

என்குருதேவர் சபாரத்தினம் சுவாமிகள் (அப்பு) அடிக்கடி பூரணத் தொட்டிக்குள் இருக்க வேண்டும் எனச் சொல்வார். இந்த உயர்ந்த நிலைதான் அனுபூதியின் அதீதநிலை. அவர்கள் ஞானத்தில் ஞானமானநெறி நடப்பவர். திருவாச கமே அவர்களின் கையேடு. இறைவனைப் பூரணன், பரிபூரணன் என அருளாளர் பேசுவர். அவனையடைந்தவர்கள் பூரணம் கண்டவர்கள். இவர்களின் இறுதிநிலை பூரணம் அடைதல். எனவே விதேகமுத்தி ஜீவன்முத்தி பெற்றா வதை - பூரணம்அடைதல் என்பர். பூரணம் நிறைவு - பரிபூரணம் மிக்க நிறைவு. மணிமொழிப் பெருமான் இறைவனைக் குறைவிலா நிறைவு எனக் குறிப்பிடுகின்றார். திருவாசகம் கோயில் திருப்பதிகம் 5. இந்த நிறைவு மனிதமனதோடும் வாழ்வோடும் ஏன் ஆன்மீக நிலையோடும் தொடர்புடையது. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. சிந்தையின் நிறைவே செல்வம். உள்ளதைக்கொண்டு திருப்திப்பட வேண்டும். பசிக்குத் தீனி போட்டால் மனம் நிறைவு ஆகும். இவ்வண்ணமே இந்த உயிர் பரிபூரணனான பரம் பொருளைச் சார்ந்து - அவன் நிழலில் அமைதி பெறல் இப்பிறப்பின் நோக்கு. அந்த இலக்கை எய்திய, எய்துபவர்களே சித்தர்கள். அருளாளர் கள் - துறவிகள் போன்றோர். எனவே பூரணம் இறைவனோடும் இறைவழி நிற்போருடனும் அணுக்கத் தொடர்புடையதென்பதைப் பாரதி பாடியுள்ளார். என் ஞான தேசிகரின் திருக்குறிப்பும் அஃதே இறைவனை, இறைவியைப் பரிபூரணமாகக் காட்டினார் தாயுமானவர்.

**பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி,**
**புராந்தகி, த்ரயம்பகி, எழில்**
**புங்கவி, விளங்கு சிவ சங்கரி ஸஹஸ்ரதள**
**புஷ்பமிசை வீற்றிருக்கும்**
**நாரணி மனாதீத நாயகி, குணாதீத**
**நாதாந்த சக்தி என்று உன்**
**நாமமே உச்சரித் திடும் அடியார் நாமமே**
**நான் உச்சரிக்க வசமோ?**
**ஆர்அணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ்**
**அகிலாண்டகோடி ஈன்ற**
**அன்னையே! பின்னையும் கன்னிஎன மறைபேசும்**
**ஆனந்த ரூபமயிலே!**
**வார் அணியும் இருகொங்கை மாதர் மகிழ்**
**கங்கை புகழ்**
**வளம் மருவு தேவை அரசே!**
**வரைரா ஜனுக்கு இருகண் மணியாய் உதித்த மலை**
**வளர்கா தலிப்பெண் உமையே**

மலை வளர்காதலி - 5

தேவை - இராமேசுவரம், ஆர் - ஆத்திமாலை, ஆரணி - வேதமுதல்வி, பின்னையும் - பின்பும், வாரணியும் - கச்சையணிகின்ற புராந்தகி - முப்புரங்களையும் அழித்தவள். த்ரயம்பகி - முக்கண்ணை உடையவள், ஆர் அணி சடைக் கடவுள் - ஆத்திமாலையணிந்துள்ள சடையினை உடைய சிவனார், ஆரணி -வேதநாயகி.

**தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன**
**செயல் கொண்டு இருப்பன முதல்**
**தேகங்கள் அத்தனையும் மோகம் கொள்**
**பௌதிகம்**
**ஜென்மித்த ஆங்கு இறக்கும்,**

**தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு** 634

செய்யத்தக்க செயலை அறிதலும், அச்செயலைச் செய்யும் வழிவகை பலவாகத் தோன்றினால் அவற்றுள் சிறந்ததைத் தேர்ந்து செயலாற்றுதலும், எதையும் ஐயுறவாகவும் இருபொருள் படவும் சொல்லாமல் திட்டவட்டமாகச் சொல்லுதலும் வல்லவனே அமைச்சன் ஆவான்.

**விரிவாய பூதங்கள் ஒன்றோடு ஒன்றாய் அழியும்**
**மேல் கொண்ட சேஷம் அதுவே,**
**வெறுவெளி, நிராலம்பம், நிறைசூன்யம்,**
**உபசாந்த**
**வேதவே தாந்த ஞானம்**
**பிரியாத பேரொளி பிறக்கின்ற அருள், அருள்**
**பெற்றோர்கள் பெற்ற பெருமை,**
**பிறவாமை என்றைக்கும் இறைவாமையாம் வந்து**
**பேசாமை ஆகும், எனவே**
**பரிவாய் எனக்கு நீ அறிவிக்க வந்ததே,**
**பரிபாக காலம் அலவோ?**
**பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற**
**பரிபூர ணானந்தமே**

பரிபூரணானந்தம் 2

**(இ-ள்)**

தெரிவாக - அறிவுடனே, ஊர்வன - தவழ்வனவும், நடப்பன - நடப்பனவும், பறப்பன - பறப்பனவும், செயல் கொண்டு - தொழில் கொண்டு, இருப்பனவும் - இருப்பனவும், முதல் - முதலான, தேகங்கள் அத்தனையும் - சரீரங்கள் அத்தனையும், மோகம்கொள் - மயக்கத்தைக் கொண்டே, பௌதிகம் - பூதசம்பந்தமெனச் சொல்லப்பட்டு, சென்மித்த ஆங்கு - உற்பத்தி யானது போலவே, இறக்கும் - அழியும், விரிவாய - பரவிய, பூதங்கள் - பஞ்சபூதங்கள், ஒன்றோடு ஒன்றாய் அழியும் - ஒன்றுக்குள் ஒன்று அடங்கிவிடும், மேற்கொண்ட - இவற்றிற்கெல்லாம் மேற்பட்டிருக்கின்ற, சேடம் அதுவே - (அழியாது) மிச்சமாய் உள்ள அந்த வஸ்துவே, வெறு வெளி (என்) - சிதாகாய மென்னவும், நிராலம்பம் - ஆதாரம் (பற்றுக்கோடு) அற்றது எனவும், நிறைசூனியம் - பெரும் பாழெனவும், உபசாந்தம் - உபசாந்தத்தினை விளைவிக்கின்ற, வேத வேதாந்த ஞானம் - வேதங்களும் உபநிடதங் களும் சொல்லும் ஞானம் எனவும், பிரியாத பேரொளி - நீங்காத பெருஞ்சோதியில், பிறக்கின்ற அருள் - உதிக்கின்ற அருள் எனவும், அருள் பெற்றோர்கள் - திருவருளினை அடைந்தோர்கள், பெற்ற பெருமை - அடைந்த பெருமை எனவும் பிறவாமை - பிறவாமையும் என்றைக்கும் எக்காலத்தும் இறவாமை - இறவாமையும், ஆய்வந்து ஆகிவந்து பேசாமை ஆகும் என மௌன நிலையாகும் எனவும் எனக்கு அடியேனுக்கு, அறிவிக்க - அறிவுறுத்தற் பொருட்டு நீபரிவாய் வந்தது - தேவரீர் அன்புடனே எழுந்தருளி வந்ததற்குக் காரணம் - பரிபாக காலம் அலவோ - எனது பரிபக்குவ காலம் அல்லவோ.

தாயுமானவர் பாடல் மெய்கண் விருத்திடயக் 19-20 பூரணம் எங்கும் நிறைந்த என்று பொருள் அங்கிங் கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்த சிவத்தைப் பூரணம் என்பர். இப் பொருளமைவிலே பூரண மாலை பாடியுள்ளார். பட்டினத்தடிகள்.

**பெற்றலுத்தாள் தாயார் பிறந்தலுத்தேன்**
**யானுமுன்றன்**
**பொற்றுணைத்தாள் பு [illegible] ாய் பூரணமே**

பூரணமாலை 26

**உற்றார் அழுதலைத்தார் உறவின் முறையார்**
**சுட்டலுத்தாள்**
**பெற்றலுத்தாள் தாயார் பிறந்தலுத்தேன் பூரணமே**

மேற்படி 27

**சிலந்தியிடை நூல்போற் சீவ செந்துக் குள்ளிருந்த**
**நலந்தனை நான் பாராயல் நலமழிந்தேன் பூரணமே**

மேலது 42

**வித்தாய் மரமாய் விளைந்த கனியாய் பூவாய்**
**சித்தாகி நின்ற திறமறியேன் பூரணமே**

மேலது 56

**என்னதான் கற்றாலென் எப் பொருளும் பெற்றாலென்**
**உன்னை அறியாதார் உய்வரோ பூரணமே.**

மேலது 42

பூரணமே எங்கும் நிறைந்த பொருளே என்னு மொருதன்மைத்தாய் இருப்பது சிவம். சிவத்தோடு கலந்து நிறைவாய் இருப்பதே இந்த உயிர்க்கு உறுதி. இறுதியும்தான். இனிப் பூரணத் தொட்டி யைப் பார்ப்பாம்.

**நடக்கினும் ஓடினும் நிற்கினும்**
**வேறு ஒரு நாட்டம் இன்றிக்**

**அறன் அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்**
**திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை** **635**

அரசியல் அறங்களை அறிந்து, கல்வி நிறைந்து, அடங்கிய சொல்லை உடையவனாய், எக்காலத்திற்கும் ஏற்றவாறு செயல் செய்யும் வழிவகைகளை அறிந்தவன் அரசனுக்குச் சூழ்ச்சித்துணை ஆவான். (சூழ்ச்சி - கலந்தாய்வு ஆலோசனை)

**கிடக்கினும் செவ்விது இருக்கினும்**
**நல் அருள் கேள்வியிலே**
**தொடக்கும் என் நெஞ்சம், மனம் அற்ற**
**பூரணத் தொட்டிக்குள்ளே**
**முடக்குவன் யான், பரமானந்த**
**நித்திரை மூடிடுமே**

பாயப்புலி 12

தொடக்கும் என் நெஞ்சம் - என்மனமானது கட்டுப்பட்டு இருக்கும். (கிடக்கும்) பூரணத் தொட்டிக்குள்ளே - நிறை நிலையிலே, முடக்குவன் யான் - நான் திளைத்திருப்பேன். நித்திரை மூடிடுமே - யோகநித்திரை வாய்க்கும்.

நடந்தாலும், ஓடினாலும், நின்றாலும், வேறுயோசனை இல்லாமல் கிடந்தாலும், சுகமாக, இருந்தாலும் அதியுயர்ந்த அருள் தேடுதலில், திருவருட் தொடர்பான விசாரணையில் என்மனம் கட்டுப்பட்டுக் கிடந்தாலும், மனமானது கட்டுப் பட்டுக் கிடக்கும். நான் மனமில்லாத, வியாபக மான தொட்டிலில் அடங்கி முடங்குவேன். சிவானந்தமாகிய யோக நித்திரை அடியேனை மூடிக்கொள்ளும் என்பது இப்பாடலின் பொருளாகும். என்நேரமும் இறை நினைப்பிலே (நினைப்பு மறப்பற்ற) இருப்பவர் நிலை பூரணத் தொட்டிக்குள் முடங்கும். இந்த நிலையையே என் குருதேவரும் எடுத்துச் சொன்னார்.

அதிவீரராம பாண்டியன் பாடியகுட்டித் திருவாசகம் என அழைக்கப்படும் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியிலும் ஒரு பாடல் வருகிறது.

**இருக்கினும் நிற்கும் போதும் இரவு கண்துயிலும்**
**போதும்**
**பொருக்கென நடக்கும் போதும் பொருந்தி**
**ஊண் துய்க்கும் போதும்**
**முருக்கிதழ் கனிவாயாரை முயங்கி நெஞ்சு**
**அழியும் போதும்**
**திருக்களாவுடைய நம்பா, சிந்தை**
**உன்பாலதாமே**

திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி.

அடியார் புகழ் பாடும் பெரிய புராணத்திலே 63 தனியடியார்களதும் ஒன்பது தொகையடியார் களதும் வரலாறுகள் பேசப்படுகின்றது. அவர்கள் தில்லை வாழ் அந்தணர்கள். பொய்யடிமை இல்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார். சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார். திருவாரூர்ப் பிறந்தார். முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர். அப்பாலும் அடிசார்ந்தார் ஆகிய ஒன்பதின்மர் ஆவர். பத்தராய்ப் பணிவார் பெருமை ஒன்பது பாடல்களிலே எழுதப்பட்டுள்ளமை இங்கே நோக்கற்பாற்று. ஏழாவது பாடல் வருமாறு.

**நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்**
**மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும்**
**இமைத்தாலும்**
**மன்று ஆடும் மலர்ப்பாதம் ஒருகாலம் மறவாமை**
**குன்றாத உணர்வுடையார் தொண்டர் ஆம்**
**குணமுடையார்**

பெரியபுராணம் 4158

அலைபாயும் மனம் அற்றால் குளிர்ந்த - திவ்விய கமகம என்னும் பூரணத்தொட்டி தானேயமையும் நெஞ்சலை நின்றால் திருவடி கொஞ்சும் சதங்கை நாதத்தில் மூழ்கிவிடும். அதுவே பூரணத்தொட்டி.

**சினம் இறக்க கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும்**
**மனம் இறக்கக் கல்லார்க்கு வாம் ஏன்பராபரமே**

பராபரக்கண்ணி 169

**சிந்தைத் துயர்என்று ஒருபாவி**
**சினந்து சினந்து போர்முயங்கி**
**நிந்தைக் கிடமாய் ஜக வாழ்வை**
**நிலை என்று உணர்ந்தே நிற்கின்றேன்**
**எந்தப் படிஉன் அருள் வாய்க்கும்**
**எனக்கு அப் படிநீ அருள் செய்வாய்**
**பந்தத் துயர் அற் றவர்க்கு எளிய**
**பரமானந்தப் பழம் பொருளே**

தாயுமானவர் ஆசைஎனும் 7

**பூரணத் தொட்டிக்குள் முடங்கிக் கிடக்கும்**
**பயிலுவோம் பேரானந்தமே எமக்கு**
**நானே நீ நீயேநா னாமிரண்டு மொன்றானால்**
**தேனின் ருசியது போல் தெவிட்டாய் நீ பராபரமே**

பூரணமயில் 10

**மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்**
**யாஉள முன்நிற் பவை** **636**

இயற்கையான நுண்மதியை, செயற்கையான நூலறிவோடு ஒருங்கே பெற்ற அமைச்சருக்கு, சூழ்ச்சிக்கு எட்டாத மிக நுட்பமான செய்திகளாக எதிர்நிற்பவை எவை உள்ளன?

# உருத்திர மூர்த்தியும் உருத்திரர்களும் ஒருவர் அல்லர்

சிவ: சண்முகவடிவேல்

மகா உருத்திர மூர்த்தி என்று வேதங்களால் புகழப்படுபவர் - மேலாகிய முழுமுதற் பொருளாய், உயிரினுள்ளே அந்தரியாமியாய் இடையறாது திருநடம் புரிகின்ற நித்தியராவார். அவருடைய திருவடிகளைச் சித்தத்திற் பதித்தவர்கள் சிவபெருமானுடைய சாரூபமும் திருநாமமும் பெறுவார்கள். அத்தன்மையினால் உருத்திரர்கள் என்று அழைக்கப் பெறுவர் அத்தகையவருடய எண்ணிக்கை எல்லை இல்லாதது.

**உருத்திர மூர்த்தி யென்போ னுயர்பரம் பொருளா யுள்ளே**
**நிருத்தம தியற்று கின்ற நித்தனா மவன்றன் பொற்றாள்**
**கருத்திடை நினைந்தோ ரன்னான் காயமுந் திருப்பேர் தானும்**
**பரிப்பரா லனைய ரெல்லை பகர்ந்திடி னுலப்பின் றாமால்**

எனக் கழறும் கந்தபுராணம்.

சிவபெருமான் ஒருவரே உருத்திர மூர்த்தியாவார். ஏனைய கடவுளர்கள் தேவர்கள் உருத்திரர் என்னும் பெயரைப் பெற்றிருந்தாலும் அவர்கள் எவரும் மகா உருத்திரரான சிவபெருமானுக்குச் சமனமாக மாட்டார்கள். சிவபெருமான் ஒருவரே மகா உருத்திரராவார். ஏனைய உருத்திரர்கள் சிவபெருமானை உடாசித்து சிவ வடிவத்தையும் சிவ நாமத்தைப் பெறுவதினாலும் உருத்திரர் என்றே அழைக்கப் பெறுவார்கள்.

ஈசான உருத்திரர் ஏகாதச உருத்திரர் என்போர், உலகம் முழுவதையும் சங்கரித்து அவற்றைத் தம்பால் ஒடுக்கி, மீட்டும் அனைத்தையும் படைத்து உலகத்திற்குக் கர்த்தாவாகியும் எத்தகையோராலும் பசு பாச ஞானங்களால் சிந்தித்தற் கரிய இயல்பினை உடையராயிருக்கும் முழு முதலாகிய மகா உருத்திர மூர்த்திக்கு அந்த உருத்திர மூர்த்தியினுடைய சாரூபமும் திருநாமமும் அவர் அருளால் பெற்றவராவார்கள்.

ஏகமாகிய பரம்பொருள் உயிர்களோடு அத்துவிதமாக அபேதமாயும் பேதமாயும் பேதா பேதமாயும் உபகரிக்கும்.

சிவபெருமான் மலமில்லாதவர் பரமவிட்டு ணுக்களுக்கு ஓர் மூலமாவார். தமக்கு வேறோர் மூலமும் முதலுமில்லாதவர்.

இன்னும் சிவபெருமான் தேவாதி தேவர். மகா தேவர். மகேசர். மும் மூர்த்திகளுக்கு முதல்வர். தனி ஒருவர். தோற்றியவை எல்லாம் முடிந்த போது தாம் முடிவில்லாது நிற்பர். உயிருக்கு உயிரானவர். தோற்றுவனவற்றிற் கெல்லாம் தோற்றமாக வுள்ளார்.

பிரம விட்டுணுக்கள் அனைவரும் பசுவர்க்கங்கள். சிவபெருமான் ஒருவரே பதிப்பொருளாவார்.

**செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்** 637

நூலறிவால் செயலைச் செய்யும் வழிவகைகளை அறிந்த போதிலும், உலகியலை அறிந்து அதனோடு பொருந்துமாறு செய்ய வேண்டும்.

ஆதியாகிய உருத்திர மூர்த்தியின் திருநாமத்தைப் பெற்ற உருத்திரர்கள் அப்பதியின் இலட்சணத்தை அடைய மாட்டார்கள். அவர்கள் கொண்ட சாரூபமும் பதியின் இலட்சணத்தைப் பொருந்தாத தன்மையாகும். எனினும் மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் அவர்களுடைய உருவமும் நாமமும் பற்றி இறைவர் என்றே உபசாரத்தால் துதிப்ப அமர்வார்கள்.

அத்தகைய உருத்திரர்கள் சிவபெருமானை அளவற்ற காலம் மனத்தில் நினைத்துத் தவஞ் செய்து குற்றமில்லாத சாரூபத்தைப் பெற்ற பரிபக்குவ அன்பினைப் பூண்டவர்கள்.

ஆதியும் அந்தமுமில்லாத சிவபெருமானுக்கு ஒருநாமம் ஒருருவம் ஓர் செய்கை ஒரு குணம் ஒன்றுமில்லை. அனாதியே ஆணவ ஆரிருளில் மூடி அழுந்திக் கிடந்த ஆருயிர்களுடைய வல்வினையைத் தமது அருட் சக்தியால் நீக்கும் பொருட்டுத் திருவுளமும் திருவடிவமும் கொள்வர்.

சிவபெருமான் உயிர்களைப் படைத்தல், காத்தல் தொழிலைப் பிரம விட்டுணுக்களுக்கு அளிப்பர். அனைத்து உயிரினங்களையும் ஆடும் சங்காரத் தொழில் மைந்தராகிய அமரரால் முடிவுறாமையினால் தமதாக்கிக் கொண்டார்.

உருத்திரன் என்னும் நாமம் - ஒப்பற்ற மகா உருத்திர மூர்த்தியாகிய சிவபெருமானுக்கும், வீரபத்திரர், ஐயனார், வயிரவர் முதலாம் குமாரர்களுக்கும் ஆகும். அப்பெருமானுடைய பாதங்களை மனத்தில் தியானித்துத் துதிக்கின்ற கணங்களுக்கும் அப்பெருமானுடைய சாரூபத்தைத் தாங்கியவர்களுக்கும் அமையும்.

காலாக்கினிருத்திரர், கூர்மாண்டருத்திரர், ஆடகேசருத்திரர், விரபத்திரருத்திரர், மாசாத்தருத்திரர், மகாதேவருத்திரர், அரருத்திரர், உருத்திரர் சங்கரருத்திரர், நீலலோகிதருத்திரர், ஈசானருத்திரர், விசயருத்திரர், வீமருத்திரர், தேவதேவருத்திரர், பவோற்பவருத்திரர், கபாலீசருத்திரர் என்பவர்கள் உருத்திரரில் சிலராவர்.

துயரிலங்கும் உலகில் பிறவிக் கடலுள் அழுந்துவோரை அயரா இன்பம் அனுபவிக்கும் முத்திப் பேற்றில் சேர்க்கும் கருணையினால் நினைத்தற்கரிய நிருமல மூர்த்தி உருத்திரன் என்னும் பேர் பெற்றனர்.

சிவபிரானுடைய குமாரர்களுக்கும் அப்பெருமானுடைய திருவடி அடைந்தவர்களுக்கும் சாரூபம் படைத்தவர்களுக்கும் உருத்திரர் என்னும் உயர்ந்த நாமம் உபசார வழக்கு ஆயிற்று. ஆயினும் விண்ணவர்களும் மண்ணவர்களும் கடவுளர்களாகக் கருத்திற் கொண்டு போற்றித் துதிக்கும் பேறு பெறுவார்கள்.

உருத்திரன் என்னும் பெயர் அக்கினி தேவனுக்கு வந்த காரணம் இது.

தேவர்கள் ஒன்று திரண்டு அமிர்தம் முழுவதையும் தாமே பெற்றுக் கொண்டார்கள். அசுரர்களைக் கோபித்துப் போர் மேல் புறப்பட்டுப் போனார்கள் புலவர்கள்.

செல்பொழுதில் தாம் பெற்ற செல்வத்தை எல்லாம் அக்கினி தேவனிடத்தில் அளித்தார்கள். போரினின்றும் மீண்டும் வந்த அமரர்கள் அக்கினி தேவனிடத்தில் செல்வத்தைக் கேட்டார்கள். அக்கினி தேவன் அது கொடாமல் ஓடினான். தேவர்கள் அக்கினியைச் சூழ்ந்து கொண்டார்கள். அடைக்கலப் பொருளைக் கொடாமல் அக்கினி தேவன் அழுதலால் உருத்திரன் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டான்.

ஓதப்படும் பெருமை மிக்க வேதங்களில் உருத்திரன் என்னும் பெயரை இட்டு ஏனையவர்களைப் பற்றிக் கூறியது.

**அறிகொன்று அறியான் எனினும் உறுதி**
**உழையிருந்தான் கூறல் கடன்** 638

அமைச்சர் கூறிய அறிவுரையை ஏற்றுக் கொள்ளாமல் ஒதுக்கி, தானும் அறியாதவனாக அரசன் இருந்தாலும், அக்குற்றம் நோக்கி, அவனை அவன் விருப்பம்போல் விட்டுவிடாமல் அவனுக்கு நன்மையானவற்றை எடுத்துச் சொல்லுதல் அமைச்சன் கடமையாகும்.

சிவபெருமானைச் சேராது. ஆதியாகிய சிவபெருமானைக் கூறியவையும் பிறர் மாட்டுச் சேராவாம். உணர்வு மேம்பட்ட ஞான சாதகர் இவ் வேறுபாட்டை நன்குணர்வர்.

அந்த உண்மையைக் கந்த புராணம் பின்வருமாறு காதலித்துக் கழறும்.

**ஓதுமா மறைக டம்மி லுருத்திர னெனும்பேர் நாட்டி**
**யேதிலார் தம்மைச் சொற்ற தீசன்மேற் சாரா வந்த**
**வாதிநா யகனைச் சுட்டி யறைந்ததும் பிறர்மாட்**
**டேறா·**
**மேதைகா லுணர்வி னான்றோர் விகற்பமீ துணர்வ**
**ரன்றே**

சூடாமணி நிகண்டு உருத்திரன் என்னும் திருநாமத்திற்குத் தரும் விளக்கம் இது:- அது சிவபிரானுக்குரியது. பகைவரை அழுவிப்போன், துக்கத்தினை நீக்குவோன், தீங்கினை நீக்குவோன், சம்சார பந்தத்தினின்றும் உயிர்களை விடுவிப்போன். சப்தமயப் பிரபஞ்சத்தினைத் தன்வயஞ்செய்தவன். எல்லாச் சொற்களானும் சொல்லப்படுவோன், பிரமஞானத்தைப் போதிப்பவன், மௌன சமாதியைப் போதிப்பவன், பிரம்ம வித்தையினால் உயிர்களுடைய அறியாமையைக் கரைப்பவன், ஆன்மாக்களால் அழுது அடையப்படுபவன், தாமே குணத்தைத் தன் வசப்படுத்திக் கொண்டவன். உயிர்களிடத்துள்ள அஞ்ஞான நிமித்தன் துயருறுவோன் எவ்வுலகிற்கும் அச்சங் கொடுப்பவன்.

சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த அருள் தன்மையால் ஐந்தொழில் இயற்றுபவர், தொடக்கமில்லாதவர், மேலானவர், மலரகிதர், காரணத்திற்குக் காரணமான அறு குணமுடையவர். ஒருவரிடத்தும் பிறவாதவர். அருவம் உருவம் அருவுருவம் ஆக அமரும் பரிபூரணர். எல்லோருக்கும் ஈசர்.

இன்னும் சிவபிரான் எல்லாமாக இருப்பர். சேதனப் பிரபஞ்ச முடிவிற்கும் அசேதனப் பிரபஞ்சமுடிவிற்கும் முடிவாய் உறைபவர். அநாதி நித்தியர். அனைத்தையும் உடைமையாக உடையர். கிளர்த்தற் கரிய கீர்த்திமை உடையவர். திருவடித் தாமரைகளைப் பற்றினவர்களுக்கன்றி உணர ஒண்ணாத புராதனர்.

அவ்வாறான அருமை பெருமைகளால் சிவபெருமான் உருத்திரர் என்று அழைக்கப்படுவதற்காக, சிவபெருமானுடைய நாமத்தையும் சாரூபத்தையும் பெற்றமைக்காக உருத்திரர் என்று உபசரிக்கப்படுபவர். எந்த வகையிலும் மகா உருத்திர மூர்த்திக்கு ஒப்பாக வைத்துப் பேசப்படத் தகார்.

**பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்**
**எழுபது கோடி உறும்** **639**

நன்மை செய்பவன் போல் அருகில் இருந்து கொண்டு தீங்கு நினைக்கும் அமைச்சன் ஒருவனை விட, அரசனுக்கு எதிராக நிற்கும் ஓர் எழுபது கோடிப் பகைவர் பக்கத்தில் இருப்பது நல்லதாகும்.

# கடவுள் காப்பாற்றினார்

யோகேஸ்வரி கணேசலிங்கம்

கண்ணனும், கமலனும் நண்பர்கள் இருவரின் வீடுகளும் அயலயலே இருந்தன. அதனால் இருவரும் ஒன்றாகவே பாடசாலைக்குச் செல்வார்கள். ஒன்றாக வீடு திரும்புவார்கள். மாலையில் இருவரும் விளையாடுவார்கள். இவர்களுடைய ஒற்றுமையைப் பார்த்து எல்லோரும் வியப்புறுவார்கள்.

கண்ணன் கடவுள் பக்தி உள்ளவன். காலை யிலும், மாலையிலும் கடவுளை வணங்குவான். எக்காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பும் கடவுளை வழிபட்ட பின்பே தொடங்குவான். இந்த ஒரு விடயத்தில் மட்டும் கமலன் கண்ணனோடு ஒத்துப் போவதற்கு மறுத்தான்.

'கடவுள் எங்கே இருக்கிறார்? கடவுளை எனக்குக் காட்டு. கோவில்களில் உள்ள சிலைகளையும் வீட்டில் உள்ள படங்களையும் பார்த்து நீ கடவுள் இருக்கிறார் என்று சொல்வதை நான் நம்ப மாட்டேன்.' என்று சொல்லுவான். 'தனது நண்பன் கடவுளை நம்பாமல் இருப்பது கண்ணனுக்குக் கவலை அளித்தது. எப்படி யாவது அவனைக் கடவுள் பக்தி உள்ளவனாக ஆக்க வேண்டும் என்பது கண்ணனுடைய ஆசை. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கடவுள் இருக்கிறார் என்பதைக் கமலனுக்கு உணர்த்திவிட வேண்டும்' என்று கண்ணன் காத்திருந்தான்.

ஒரு முறை இவர்கள் படித்த பாடசாலை மாணவர்களைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதற்கு ஒழுங்கு செய்தார்கள். மாணவர்களும் மிகவும் ஆவலுடன் சுற்றுலா செல்வதற்குக் காத்திருந்தார்கள். அவர்கள் போவதற்குக் குறித்த நாளும் வந்தது. மாணவர்கள் காலையிலேயே பாடசாலை மண்டபத்திற்கு வந்து விட்டார்கள். உணவுப் பொட்டலங்கள், குளிர் பானங்கள், கிரிக்கட் விளையாடுவதற்கு பற், பந்து, கமெரா என எல்லோரும் விதம் விதமான பொருட்களுடன் வந்திருந்தனர். இவர்கள் போவதற்கான பஸ் வண்டியும் வந்தது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஆரவாரித்தபடியே பஸ்ஸில் ஏறி இருக்கைகளில் உட்கார்ந்தார்கள். சில நிமிடங்களில் பஸ் வண்டி மாணவர்களைச் சுமந்தபடியே சென்று கொண்டிருந்தது.

திடீரென பஸ்ஸின் சக்கரம் ஒன்று காற்றுப்போய் பஸ் நின்று விட்டது. பஸ் எதற்காக நிற்கின்றது என்ற காரணத்தை அறியாமல் மாணவர்கள் குழம்பிப்போய் இருந்தார்கள்.பஸ் சாரதி இறங்கி வண்டியைச் சுற்றி வந்து பார்த்தார். ஒரு சில்லில் ஏதோ ஒரு கூரிய பொருள் குத்தி விட்டது. காற்று முற்றாகப்போய் விட்டதால் பஸ்வண்டி ஓட முடியாது என்று சொன்னார்.

'சக்கரத்தை மாற்றி நாம் மீண்டும் பயணம் தொடங்குவதற்கு ஒரு சில மணிநேரம் எடுக்கும்' என்று சாரதி கூறியதைக் கேட்ட மாணவர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள். அவர்கள் கவலையுடன் செய்வது அறியாது இருந்தார்கள்.

"கண்ணா! நீ வீட்டில் இருந்து வருவதற்கு முன் இப்பயணம் நன்றாக நடக்க வேண்டும் என்று கடவுளிடம் வேண்டி விட்டுத்தானே வந்திருப்பாய்? எங்கே உனது கடவுள் எங்களுக்கு ஏன் உதவாமல் இருக்கிறார்?" பாதி ஏளனத்துடன் கமலன் கேட்டான்.

---

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர் 640

செயலைச் செய்துமுடிக்கும் திறமை இல்லாதவர், செய்ய வேண்டிய செயல்களை முறையாக எண்ணித் திட்டமிட்டிருந்தாலும், செய்யும்போது முற்றுப் பெறாதவனாகவே (அரை குறையாகவே) செய்வர்.

"கமலா! கடவுள் ஏதோ ஒரு நன்மை கருதித்தான் இப்படிச் சக்கரத்திற்குக் காற்றுப் போகச் செய்திருப்பார். உனது ஏளனப் பேச்சை நிறுத்தி விட்டு நாம் சீக்கிரமே பயணத்தைத் தொடர வழி செய்யுமாறு கடவுளை நினைத்துக் கொள்" என கோபமாகச் சொன்னான் கண்ணன்.

கண்ணன் பேச்சு கமலனுக்கு எரிச்சலைக் கொடுத்தது 'நீயும் உன் கடவுளும் நீ மாறவே மாட்டாய்' என்று சொன்ன கமலன் சாரதி சக்கரத்தை மாற்றுவதைப் பார்க்கச் சென்று விட்டான். அப்போது அவ்வழியே அம்புலன்ஸ் வண்டி, பொலீஸ் ஜீப் என்பன வேகமாக வந்தன.

அந்தத் தெருவால் சென்ற வாகனங்களை மறித்துத் திரும்பிப் போகும்படி கட்டளை இட்டார்கள். என்ன நடந்தது என்று குழம்பிய படியே கேட்டவர்களுக்கு வேகமாக வந்த இரு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் அவை தீப்பிடித்து எரிந்து கொண்டிருப்பதாகவும் அவ்வழியே சென்ற வாகனங்களும், மக்களும் விபத்தில் சிக்கி விட்டதாகவும் சொன்னார்கள்.

'எங்களுடைய பஸ் வண்டிக்குக் காற்றுப் போயிருக்காவிட்டால் நாங்களும் அந்த விபத்தில் சிக்கியிருப்போம். மாணவர்களும் ஆசிரியர்களும் பஸ்ஸில் இருந்து குதிப்பதற்குள் எங்களுடைய பஸ்ஸும் தீக்கிரையாகியிருக்கும். கடவுள் தான் எங்களைக் காப்பாற்றி இருக்கிறார்.' என ஆசிரியர் ஒருவர் கூறினார்.

கமலனைக் கண்ணன் அர்த்தத்துடன் பார்த்தான். ஆசிரியர் கூறியதை ஏற்றுக் கொண்ட கமலன் கண்ணனின் கையைப் பிடித்து ' உனது தெய்வம் தான் எங்கள் எல்லோரையும் காத்தது.' என்று கண்ணீர் மல்கக் கூறினான். நண்பனின் மனமாற்றத்தைக் கண்ட கண்ணனின் முகம் மலர்ந்தது.

# நினைவிற் கொள்வதற்கு

**பார்த்திப ஆடி**

| | | | |
|---|---|---|---|
| 01. | 17. 07. 2005 | ஞாயிறு | ஆடிப்பிறப்பு |
| 03. | 19. 07. 2005 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| 05. | 21. 07. 2005 | வியாழன் | பூரணை விரதம் |
| 08. | 24. 07. 2005 | ஞாயிறு | சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| 14. | 30. 07. 2005 | சனி | கார்த்திகை விரதம், மூர்த்தி நாயனார் குருபூசை, புகழ்ச்சோழ நாயனார் குருபூசை |
| 17. | 02. 08. 2005 | செவ்வாய் | பிரதோஷ விரதம், கூற்றுவ நாயனார் குருபூசை |
| 19. | 04. 08. 2005 | வியாழன் | ஆடி அமாவாசை விரதம் |
| 22. | 07. 08. 2005 | ஞாயிறு | ஆடிப்பூரம் |
| 24. | 09. 08. 2005 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 25. | 10. 08. 2005 | புதன் | கரு பஞ்சமி |
| 26. | 11. 08. 2005 | வியாழன் | ஷஷ்டி விரதம் |
| 27. | 12. 08. 2005 | வெள்ளி | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, சேரமான் பெருமான் நாயனார் குருபூசை |
| 30. | 15. 08. 2005 | திங்கள் | கலிய நாயனார் குருபூசை, கோட்புலி நாயனார் குருபூசை |

# சிவஞானபோதம்

## இரண்டாம் அதிகரணம்

மட்டுவில் ஆ. நடராசா

**உலகம் முத்தொழிற்படுமாயினும் கருத்தா வேண்டாம் என்பாரை மறுத்து உலகத்துக்குக் கருத்தா வேண்டப்படும் எனக் கூறும் மேற்கோள்.**

இனி இல்லதற்குத் தோற்றமின்மையின் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின் மையின் ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை என்றது.

இவ்வாறு சொற்சுருக்கமாகக் கூறினாரேனும் பொருளியையுக்கேற்ப இவ்வதிகரணத்தை மூன்றதிகரணமாக வகுத்துக் கூறுவதே ஆசிரியரின் கருத்தாகும்.

இந்த மேற்கோள் சூத்திரத்திற் கூறப்பட்ட தோற்றிய திதியே ஒடுங்கி உளதாம் என்பதைப் பொருளியையுக் கேற்ப மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கூறுகின்றது. இதில்,

**திதி என்பதற்கு இல்லதற்குத் தோற்றமின்மையின் என்றும்,**

**தோற்றிய என்பதற்கு உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்றும்,**

**ஒடுங்கியுளதாம் என்பதற்கு ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை யென்றும் கூறப்பட்டிருக்கிறது.**

இவற்றில்

i. இல்லதற்குத் தோற்றமின்மையின் என்பதும்.
ii. உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை யின்மையின் என்பதும், ஏதுக்களாகவும், ஒடுங்கின சங்காரத்தி னல்லது உற்பத்தியில்லை என்பது மேற்கோளாகவும் அமைந்திருக்கின்றன.

இவ்வதிகரணத்தை மூன்றதிகரணங்களாக வகுத்துக் கூறுவதே ஆசிரியரின் கருத்தானாலும் இந்த மூன்று அதிகரணங்களும் உலகத்துக்குக் கருத்தா உண்டென்பதையே வலியுறுத்துகின்றன.

இதிற் கூறப்பட்டிருக்கும் ஏதுக்களுக்கு மேற்கோள்களையும் மேற்கோளுக்கு ஏதுவையுங் கூறினால், மூன்றதிகரணங்களும் பின் வருமாறு மேற்கோள்களையும் ஏதுக்களையுங் கொண்டிருக்கும்.

**உலகம் உள்பொருளெனக் கூறும் முதலாவது மேற்கோள்.**

**இனி உலகம் உள்ளது என்றது**

இந்த மேற்கோளில் முத்தொழிற்படுமெனக் கூறப்படும் உலகம் இல்பொருளோ உள் பொருளோ என்பது ஐயம். இவ்வை யப்பாட்டின் கண், இல் பொருளாகிய உலகம் தோன்றி நின்று அழியினும், ஒரு மரம் நிற்க வேறொரு மரம் அழிவதும் நிற்கும் மரத்திலிருந்து வேறொரு மரந் தோன்றுவதும் போலத் தத்தம் சார்பிற் றோன்றி யழிதலே இயல்பு. அது தன்னைத் தோற்றுவிப்பான் ஒருவனை யுடைத்தென்றல் செல்லாதென்பது பிறர் கூறும் பக்கம் இவ்வாறு கூறுவோர் புத்த நூலார். அவர்களது கூற்றை மறுக்கும் முகமாக, சூத்திரத்தைப் பதச்சேதஞ் செய்து உலகம் உள் பொருளென இந்த மேற்கோளிற் கூறப்படுகின்றது.

**உலகம் உள்பொருள் என்பதற்குக் காட்டும் ஏது**

இல்லதற்குச் தோற்ற மின்மையின் உலகம் உள்பொருளென்ப தெவ்வா றென்னும் வினாவுக்கு விடை கூறும் முகமாக, இல்லாத பொருள் தோன்றாதாதலின் உலகம் உள்பொருளேயென்று கூறி மேற்கோளை வலியுறுத்துகின்றது. இவ்வேது.

இவ்வேதுவின் பொருள் :- முயற் கொம்பு இல்பொருள் அது தோன்றினதுமில்லை. தோன்றுகின்றதுமில்லை, தோன்றப் போவதுமில்லை. முயற் கொம்புக்குப் போலன்றி உலகத்துக்கு உற்பத்தி காணப்படுதலால் அது உள்பொருளேயாகும் எ - று

**உலகம் உள்பொருளாயினும் அதனைத் தோற்று விப்பதற்கு ஒரு கருத்தா வேண்டாம் என்பாரை மறுத்து, கருத்தா வேண்டுமெனக் கூறும் மேற்கோள்**

**இனி உலகம் செய்வோனை உடைத்து என்றது.**

இந்த மேற்கோளில் உலகத்தைத் தொழிற்படுத்துவதற்கொரு கருத்தா வேண்டுமோ வேண்டாமோ என்பது ஐயம். இவ்வையப்பாட்டின் கண், உள்பொருளெனப்பட்ட பிரபஞ்சம் தத்தம் முதற் காரணத்தினின்றும் தானே தோன்றியழியும். அதற்குத் தோற்ற நாசங்களைச் செய்வதற்கொரு கர்த்தா வேண்டாமென்பது பிறர் கூறும் பக்கம் இவ்வாறு கூறுவோர் சாங்கியர். அவர்களது கூற்றை மறுக்கும் முகமாகச் சூத்திரத்தைப் பதச்சேதஞ் செய்து உலகத்தைத் தொழிற்படுத்துவதற்கொரு கருத்தா வேண்டுமென இந்த மேற்கோளிற் கூறப்படுகின்றது.

**உலகத்துக்குக் கருத்தா வேண்டும் என்பதற்குக் காட்டும் ஏது**

**உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை இன்மையின்**

உலகம் உள்பொருளாயினும் அதை உண்டாக்குவதற்கொரு கருத்தா வேண்டுமென்பதற்குப் பிரமாணமென்ன வென்று கேட்போருக்குக் காண்டல் அனையால் உலகம் செய்வோனை உடைத்தென்னும் மேற்கோளை வலியுறுத்துகின்றது இவ்வேது.

இ-ள் :- மண் முதலியவற்றிற் சூக்குமமாயுள்ள குடம் முதலிய பொருள்கள் தூலமாய் வெளிப்பட்டுத் தோன்றுதற்குக் குயவன் முதலிய செய்வோரையின்றி வனைதல் முதலிய தொழில்கள் நிகழா இவ்வியல்பிற்றான் மாயையிற் சூக்குமமாய் ஒடுங்கியிருக்கும் உலகமும் தூலமாய் வெளிப்பட்டுத் தோன்றுவதற்கொரு கருத்தா வேண்டுமென்னும் மேற்கோளை வலியுறுத்துகின்றது.

இப்போது,

**உலகத்துக்குக் கருத்தா உண்டாயினும் அக்கருத்தா பிரமன் முதலியோராதல் அமையுமென்பாரை மறுத்துச் சிவனே கருத்தா எனக் கூறும் மேற்கோள்.**

**இனி ஒடுங்கிய சங்காரத்தினல்லது உற்பத்தி யில்லை என்றது.**

இந்த மேற்கோளில், உலகத்தைத் தோற்றுவிக்கும் கருத்தா சங்காரக் கடவுளோ காத்தற் கடவுள் படைத்தற் கடவுளரில் ஒருவரோ என்பது ஐயம் இவ்வையப்பாட்டின் கண், உலகத்துக்குக் கருத்தா திதி, கருத்தா சிருட்டி கருத்தா முதலியோரில் ஒருவரென்பதே பொருந்துமென்பது பிறர் கூறும் பக்கம் கருத்தா விட்டுணுவே என்போர் பாஞ்சராத்திரிக பிரமன் என்போர் இரணிய கருப்பர். அவர்களது கூற்றை மறுக்கும் முகமாக ஒடுங்கியுள்ளதை மென்னுஞ் சூத்திரக் கூற்றை பதச்சேதஞ்செய்து, உலகத்துக்குக் கருத்தா சங்காரக் கடவுளேயென இந்த மேற்கோளிற் கூறப்படுகின்றது.

இ-ள்:- உலகம் தான் ஒடுங்குவதற்கு நிலைக்களமான சாங்கார கருத்தாவினின்றன்றி உனதாகாது எ-று

ஒடுங்கின என்னும் பெயரெச்சம் சங்காரம் என்னும் இடப்பெயரோடு முடிந்தது. சங்காரம் என்பது சங்காரக் கடவுளைக் குறித்தலால் ஆகுபெயர்.

உற்பத்தி சங்காரக் கடவுளைத் தவிர்ந்த ஏனைய கடவுளரால் நிகழாது என்பதை வலியுறுத்துவதற்காக, உற்பத்தி சங்காரத்தினல்ல தில்லையென்று எதிர் மறை முகத்தாற் கூறினார்.

இந்த மேற்கோளில், பிரபஞ்சம் சங்கார கருத்தாவில் ஒடுங்குதலால் ஒடுங்கின சங்கார கருத்தாவிலிருந்தல்லது தோன்றாதென, பிரபஞ்சம் சங்கார கருத்தாவிலிருந்து தோன்று வதற்குரிய ஏது குறிப்பாகக் கூறப்பட்டிருக்கின்றது. அதை ஏதுவில் வெளிப்படையாகக் கூறுகின்றார்.

**ஏது**
**ஆண்டு ஒடுங்குதலின்**

சங்காரக் கடவுளே முதற் கடவுள் என்பதற்குப் பிரமாணமென்ன என்னும் வினாவுக்கு விடை கூறும் முகமாக, பிரபஞ்சம் சங்காரக் கடவுளிடத்து ஒடுங்குதலினால், சங்காரத்தின ல்லது உற்பத்தியில்லை என்னும் மேற்கோளை வலியுறுத்துகின்றது.
இவ்வேது,

இ-ள் :- எப்பொருள் எவ்விடத்தில் ஒடுங்குகின்றதோ அப்பொருள் ஒடுங்கிய அவ்விடத்திலிருந்தே உற்பத்தியாகும். குடம் உடையும் போது குடத்தின் தன்மை மண்ணிடத்து ஒடுங்கி, குடம் மீளத் தோன்றும் போது மண்ணிலிருந்து தோன்றுவது போல; பிரபஞ்சம் சங்கார காரணனிடத்தில் ஒடுங்கி மீளத் தோன்றும் போது சங்காரக் காரணத்திலிருந்தே தோன்றுமெனக் கூறி மேற்கோளை வலியுறுத்துகின்றது இவ்வேது.

**உலகம் உள்ளதென்பதற்குக் காட்டும் உதாரணம்**

**இலயித்த தன்னிலில யித்ததாம லத்தா**
**லிலயித்த வாறுளதா வேண்டும்**

கொண்டு கூட்டு :- இலயித்தது இலயித்த தன்னில் ஆம் மலத்தால், இலயித்தவாறு உளது ஆ வேண்டும்.

உலகம் உள் பொருளாயின் உள்ளதற்கு உண்டாக வேண்டுவதில்லை. ஆதலால் ஒடுங்கிய உலகம் மீளத் தோன்றுமென்பது பொருந்தா தெனப் புத்தர் கூறுவர். அவர்களது கூற்றை மறுக்கும் முகமாக இல்லதற்குத் தோற்றமின்மையின் என ஏதுவிற் கூறியதை வலியுறுத்துகின்றது இவ்வுதாரணம்.

இ-ள் :- இலயித்தது உள்பொருளாய்ச் சங்கார காலத்தில் ஒடுங்கிய உலகம் இலயித்த தன்னில் ஆம் - தான் ஒடுங்குதற்கு இடமாகிய சங்காரக் கடவுளிலிருந்து படைப்புக் காலத்தில் மீள உண்டாகும், (ஒடுங்கிய உலகம் ஒடுங்கியவாறே இருக்காது. மீண்டும் உண்டாக வேண்டிய தில்லை. மீள உண்டாக வேண்டுமாயின் முன்னர் ஒடுங்காதிருந்திருக்கலாம். அவ்வாறின்றி ஒடுங்கி மீளவுண்டாவது எதற்காகவெனின்) மலத்தால் - கன்மமலம் பரிபாகமாதற் பொருட்டு ஒடுங்கி ஆணவம் பரிபாகமாதற் பொருட்டு மீளவுமுண்டாகும். (அவ்வாறாயினும் முன்பிருந்த உலகம் சங்கார காலத்தில் அழிந்து போகப் படைப்புக் காலத்தில் வேறுலகந் தோன்றுமென்று சொல்லாமல், ஒடுங்கிய உலகம் மீளத் தோன்று மென்பதற்கு பிரமாணமென்பது எனின்) இலயித்தவாறு உளது ஆ வேண்டும். - எந்தப் பொருள் எவ்வாறு நின்று ஒடுங்கியதோ அந்தப் பொருள் ஒடுங்கியவாறே மீண்டும் உளதாதல் எல்லாராலும் விரும்பப்படும். எ-று

ஒடுங்கியதே தோன்றும் நியமம் இல்லையாயின் நெல்லிலிருந்து கமுகும் கமுகிலிருந்து நெல்லுந் தோன்றக் கூடும். அவ்வாறின்றி நெல்லிலிருந்து நெல்லும் கமுகிலிருந்து கமுகுந் தோன்றுவதற்குக் காரணம் நெல்லின் தோற்றமே நெல்லிடத்தும் கமுகின் தோற்றமே கமுகிடத்தும் ஒடுங்கியிருப்பதே யாகும். இவ்வாறே ஒடுங்கிய உலகமும் மீளச் சங்காரக் கடவுளிலிருந்தே தோன்றும் எ-று. நெல்லும் கமுகும் ஆகு பெயர்கள். அவை அவற்றின் விதைகளைக் குறிக்கின்றன.

இவ்வுதாரணத்தால் இல்லதும் உள்ளது மல்லாத பொருள் தோன்றுமென்னும் சூனியவாதி மதமும், இல்லதும் உள்ளதுமாய பொருள் தோன்றுமென்னும் அநேகாந்தவாதி மதமும் மறுக்கப்பட்டது.

உடம்பெடுப்பதற்குமுன் சீவன் உண்டோ இல்லையோ என்று கேட்டால் உண்டாம், இல்லையாம், உண்டும் இல்லையுமாம் என்று பலவிதமாக அநேகாந்தவாதி விடையளிப்பான். அநேகாந்தவாதி - ஆருகதர்.

கன்மமல பரிபாகமென்பது நல்வினை தீவினைகளின் காரியமாகிய இன்ப துன்பங்களைப் பலகாலம் அனுபவிப்பதால்

அவற்றில் வெறுப்புத் தோன்றுதல். அதனால் கன்மமலபரிபாகம் உண்டாகும் பொருட்டு உயிர் நெடுங்காலம் இன்பதுன்பங்களை அனுபவிக்க வேண்டும். அதனால் எடுத்த உடலோடு கூடி அனுபவிக்க வேண்டிய இன்பதுன்பங்களை அனுபவித்தபின் அவ்வுடலை ஒடுங்கிக் கொண்டு, பக்குவமாயிருக்கும் கன்மபலனை அனுபவிக்கச் செய்யும் பொருட்டு உயிருக்கு அவ்வனுபவ த்திற்கேற்ற உடல் முதலியவற்றை இறைவன் மாற்றிக் கொடுக்க வேண்டுமாதலால் ஒடுக்கம் கன்மமல பரிபாகத்தின் பொருட்டு நிகழ்கின்றது.

ஆணவமலம் ஆன்மாவுக்கு அறியாமையைச் செய்வது இவ்வாறு ஆன்மாவின் அறிவை மறைக்கும் ஆணவமலசத்தி அதன் அறிவை மறைக்க முடியாமல் வலிகெட்டுப்போதல் ஆணவமலபரிபாக மெனப்படும்.

**உலகம் ஒடுங்குவதற்கு ஆதாரமாகிய சங்காரக் கடவுளே உலகத்திற்கு முதற் கடவுள் என்பதற்குக் காட்டும் உதாரணம்.**

**தத்திதியி லென்னி னழியா தவையழிவ - இலயித்த**
**தத்திதியு மாதியுமா மங்கு.**

கொண்டு கூட்டு :- இலயித்தது அத்திதியில் ஆதியும் ஆம் அங்கு அழிவது.

சற்காரியவாதம் காரியங்கள் ஒடுங்குங்கால் அதனதன் முதற் காரணத்தில் ஒடுங்குமெனக் கொள்ளும். உலகிற்கு முதற்காரணமாகிய மூலப்பகுதி வாசு தேவனுருவாதலால் உலகம் அவனிடத் தொடுங்கு மென்றலே பொருந்தும். அவ்வாறன்றி முதற் காரணத்தின் வேறாய் உலகிற்கு நிமித்த காரணமெனக் கொண்ட சங்கார கருத்தாவிடத்து ஒடுங்குமென்றால் பொருந்தாதென்பர். பாஞ்சராத்திரிகள் அவர்களது கூற்றை மறுக்கும் முகமாகச் சங்கார கருத்தாவினிடத்து ஒடுங்குமெனக் கூறி ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை என்ற மேற்கோளில் உள்ள ஒடுங்குதலினால் என்னும் குறிப்பேதுவை இலயித்த தன்னில் என்னும் உதாரணத்திற் கூறப்பட்ட இலயித்தத னால் என்னும் குறிப்பேதுவையும் வலியுறுத்து கின்றது. இவ்வுதாரணம்,

இ-ள் :- இலயித்தது அத்திதியில் என்னின் - உலகம் ஒடுங்கியது அந்த மூலப்பகுதி வடிவாய திதி கருத்தா விடத்தென்னில், அவை அழியாது - மூலப்பகுதிக்கு மேல் வித்தியா தத்துவம் சிவ தத்துவங்களிலுள்ள உலகங்கள் மூலப்பகுதியினால் வியாபிக்கப்படாமையால் மூலப் பகுதியின் கீழுள்ள உலகங்கள் மாத்திரமே மூலப்பகுதியில் ஒடுங்குவதன்றி மாயாகாரியமான உலகம் முழுவதும் மூலப் பகுதியில் ஒடுங்காது, அத்திதியும், ஆதியும் ஆம் ஆங்கு அழிவது - அவ்வாறாயின் மாயாகாரியத்தொகுதி முழுவதும் எங்கே ஒடுங்குமெனின் அந்தக் காத்தற் கடவுளாகிய விட்டுணுவும் படைத்தற் கடவுளாகிய பிரமாவும் தோன்றுதற்குக் காரணமாகிய சங்காரக் கடவுளிடத்தே அவ்விருவரோடும் ஒடுங்கும் எ-று.

சைவ சித்தாந்திகள் தத்துவங்கள் முப்பத்தாறென்பர். அசுத்த மாயையிற் தோன்றும் கலா தத்துவத்திலிருந்து மூலப்பகுதி தோன்றி, மூலப் பகுதியிலிருந்து ஆன்ம தத்தத்துவங்கள் இருபத்து நான்குந் தோன்றும் பாஞ்சராத்திரிகள் மூலப்பகுதியே பிரபஞ்சத்துக்கு முதற் காரணமெனவும் அது வாசுதேவனுருவனவுங் கூறுவர்.

இலயித்ததென்றது, இலயித்ததாகலான் என்னும் ஏதுப் பொருளுணர நின்ற பெயர்ச் சொல் ஒடுங்கும் போது ஒடுக்கப்படும் காரியத்தின் சத்திக் கூட்டமாய் சூக்குமமாய் நிற்பதொன்றுண்டு. அதுவே பிரபஞ்சத்துக்கு முதற் காரணமாகிய மாயை. பிரபஞ்சத்துக்குக் கருத்தா உண்டென்று கூறிய இவ்வெண்பாவில் மாயை உண்டென்பதும் கூறப்பட்டது.

உனதா வேண்டும் என்பதில் 'ஆ' என்பது முதனிலைத் தொழிற்பெயர். இதில் வரும் ஆ என்பது ஆதல் என்னும் பொருளைத் தருகின்றது. முதலாவது தொடரிலுள்ள வேண்டும் என்பது வேண்டப்படும் என்னும் பொருளைத் தருகின்றது. வேண்டப்படும் விரும்பப்படும்.

அவை அழிவது என்பதிலுள்ள அவை என்பது பிரபஞ்சத் தொகுதியைக் குறிக்கின்றது.

திதியும் ஆதியும் ஆகுபெயர். திதி என்பது காத்தலைச் செய்யும் விட்டுணுவையும் ஆதி என்பது ஆதியைச் (படைத்தலைச்)செய்யும். பிரமாவையும் குறிக்கின்றன. இதனால் விட்டுணுவே முதற் கடவுளென்னும் பாஞ்சராத்திரிகளும் பிரமாவே முதற் கடவுளென்னும் இரணிய கருப்பரும் மறுக்கப்பட்டனர்.

### உலகம் ஒரு கருத்தாவை உடையது என்பதற்குக் காட்டும் உதாரணம்

**வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா**
**மத்தன்றா ணிற்ற லவர்வினையால் - வித்தகமாம்**
**வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்**
**கூட்டானே மண்போற் குளிர்ந்து.**

கொண்டு கூட்டு :- மண் குளிர்ந்து வித்து உண்டா மூலம் முளைத்தவா தாரகம் ஆம் அத்தன் தாள் நிற்றல் அவர் வினையால் வித்தகம் ஆம் வேட்டுவன் ஆம் அப்புழுப் போல் வேண்டு உருவை தான் கொடுத்து கூட்டானே

உலகம் தனக்கு முதற் காரணமாகிய மாயையில் ஒடுங்குவதன்றி, உலகத்துக்கு நிமித்த காரணனொருவன் உண்டெனக் கொள்ளினும் அவனிடத்தில் ஒடுங்குமென்பது பொருந்தாது. எப்பொருள் எதனிடத்தில் ஒடுங்குகின்றதோ அப்பொருள் அதனிடத்திலிருந்து உற்பத்தியாகுமாதலால், மாயையில் ஒடுங்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும். அதற்கோர் இறைவன் வேண்டுமெனச்சாங்கிய நூலார் கூறுவர். அவர் கூற்றை மறுக்கும் முகமாக உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என ஏதுவிற் கூறப்பட்டதை வலியுறுத்துகின்றது. இவ்வுதாரணம்.

இ-ள் :- மண் குளிர்ந்து வித்து உண்டா மூலம் முளைத்தவா - மாயை வித்தும் உலகம் முளையும் போலுமாகலின் வித்துக்கு ஆதாரமாகிய நிலம் குளிர்ந்த வழி அதனிடத்து வித்து உள்ளதாக அதிலிருந்து முளை தோன்றியவாறு போல் தாரகமாம் அத்தன் தாள் நிற்றல் (இன்) மாயை தனக்கு ஆதாரமான இறைவனது சக்தியின் கண் உள்ளதாய் நிற்றலால், அவர் வினையால் வித்தகம் ஆம் - சத்தி சங்கற்பித்த வழி அவரவர் வினைக்கீடாக அவ்வக் காரியங்களைத் தோற்றுவிக்கும் சாமர்த்தியம் உண்டாம். சத்தி சங்கற்பிக்காத விடத்து மாயைக்குக் காரியங்களைத் தோற்றுவிக்கும் சாமர்த்தியம் கிடையாது. ஆதலால் மாயையில் ஒடுங்கித்தோன்றிய உலகம் அதற்காதாரமாகிய இறைவனது சத்தி யினொடுங்கித் தோன்றியதேயாம் எ-று தாரகம் - ஆதாரம் தான் சக்தி.

உரையில், ஆதலால் என்பது தொடக்கம் தோன்றியதேயாம் என்பது வரையுள்ள பகுதி குறிப்பாகக் கொள்ளுமாறு எஞ்சி நின்றமையாற் குறிப்பெச்சம்.

மாயையிலிருந்து தோன்றிய உலகை அதற்காதாரமாகிய சத்தியிலிருந்து தோன்றியதெனக் கூறுதல், கிழங்கிலிருந்து தோன்றிய தாமரையைக் கிழங்குக்கு ஆதாரமாகிய சேற்றிலிருந்து தோன்றியதென்னும் பொருளைத் தரும். பங்கசமெனக் கூறுவதோ டக்கும் பங்கம் - சேறு ஜம் - தோன்றுதல். இதில் கூறப்பட்டிருப்பது போலவே சிவஞான சித்தியாரின் 'உயிரவை ஒடுங்கிப் பின்னும் உதிப்பதென் அரன்பால்' என்றும் உலகவே னுருவிற் றோன்றி யொடுங்கிடும் என்றும் வாதுளாகமத்தில் உலகம் அவனுருவிற் றோன்றி யொடுங்குமாறு வகுத்தோதப் பட்டிருத்தலுங் காண்க.

இவ்வெண்பாவில்,

| உவமானம் | உவமேயம் |
|---|---|
| வித்து | மாயை |
| முளை | உலகம் |
| மண் | சத்தி |

இந்த உவமானத்தில் மண் குளிர்ந்த விடத்து முளை தோன்றுமெனக் கூறப்பட்டிருக்கின்றது. மண்ணுக்குக் குளிர்தலாகிய வினை கூறப்பட்டது போல உவமேயமாகிய சத்திக்கு வினை கூறப்படவில்லை. அதனால் அதற்குரிய

வினையை வருவித்து சத்தி சங்காபித்த வழி என உரை செய்யப்பட்டது. உவமேயத்தில் தாரகமாம் என்பதைச் சத்திக்கு அடையாகக் கூறியது போல உவமானத்தில் மண்ணுக்கு அடையாகத் தாரகமாய் என்பதைக் கூறவில்லை உவமேயத்துக்குக் கூறிய அடை உவமானத்துக்கும் பொருந்துமாதலால் அதை விரித்து, வித்துக்கு ஆதாரமாகிய நிலம் என உரை செய்யப்பட்டது.

பரிணாம வாதிகள் மாயை என்றொரு பொருளில்லை பிரமமே உலகமாகத் தோன்று மென்பர். வித்தில்லாத வழி நிலத்திலிருந்து முளை தோன்றாதவாறு போல மாயை இல்லாத வழி பிரமத்திலிருந்து உலகம் தோன்றா தென்றதால் பரிணாம வாதிகள் மறுக்கப்பட்டனர்.

மாயா வாதிகள் மாயையை அநிர்வசன மென்பர். அநிர்வசனம் உறுதியாகச் சொல்லக்கூடாதது. இவ்வெண்பாவில் மாயை உள்பொருளென உறுதியாகக் கூறியதனால் மாயாவாதிகள் மறுக்கப்பட்டனர்.

பாஞ்சராத்திரிகளும் சிவாத்துவித சைவரும் மாயை இறைவனின் வேறன்று என்பர். மாயை இறைவனின் வேறென்று கூறியதனால் பாஞ்சராத்திரிகள் மறுக்கப்பட்டனர்.

சத்தி சங்கற்பித்த விடத்து மாயையிலிருந்து பல்வேறு விதமாக உலகந் தோன்றுமென்பதனால், இவ்வாறு பலவேறு வகைபடச் சங்கற்பிப்பதற்குக் காரணம் என்ன? என்னும் வினாவை ஆசிரியர் தாமே வினாவி, அவ் வினாவுக்கு விடையாக அவர் வினையால் என்றார்.

வித்தகம் - விசித்திரம் சாமர்த்தியம்

தன் வயத்தானன்றி வினைவயத்தாற் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பவன் இறைவனாவானோ எனின், அதற்குரிய விடை வெண்பாவின் பிற்பகுதியிற் கூறப்படுகின்றது.

தன்வயம் - சுதந்திரமுடைமை

வெண்பாவின் பிற்பகுதியின் பொருள் : வேட்டுவன் ஆம் அப்புழுப்போல் வேண்டு உருவைத் தான் கொடுத்துக் கூட்டானே - வேட்டுவனாதலை விரும்பும் புழுவுக்கு அது விரும்பிய வடிவத்தை வேட்டுவன் (வேட்டை வாளிக் குளவி) கொடுப்பது போல இறைவனும் அவரவர் வினைக்குத் தக்க பயன்களையும் கூட்டமாட்டானோ? கூட்டுவன்.

இவ்வாறு வினைப்பயனைக் கூட்டுஞ் சுதந்திரம் உண்மையால் இறைவன் தன்வயத்தனாவான் என்பதற்குத் தடையில்லை எ-று
அப்புழு போல் என்றதிலுள்ள போல் என்பது அசை.

மண் போல் குளிர்ந்த வழி என நிற்க வேண்டியது குளிர்ந்து எனத் திரிந்து நின்றது.

இரண்டாம் வரியிலுள்ள நிற்றல் என்பதில் ஏதுப் பொருளைத் தரும் இன்னுருபு தொக்கது.அதை விரித்து சக்தியின்கண் உள்ளதாய் நிற்றலான் என உரை செய்யப்பட்டது.
கூட்டானே என்பதிலுள்ள ஏகாரம் எதிர் மறை. அது கூட்டுவன் என்னும் பொருளைத் தருகின்றுது.

## இறைவன் முத்தொழில் செய்தும் வேற்றுமை அடையான் என்பதற்குக் காட்டும் உதாரணம்

**நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்**
**றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவ - னாக்காதே**
**கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்**
**கண்டவனி லிற்றின்றாங் கட்டு.**

முன்னைய உதாரணத்திற் கூறியபடி உலகிற்கு முதற்கடவுள் உண்டெனக் கொள்ளினும், அவன் படைப்பு முதலிய தொழில்களைச் செய்வானாயின் விகாரமெய்தி அத்தொழிலிற் கட்டப்படுவன். தொழில் செய்யானாயின் கருத்தாவாமாட்டானெனக் கூறுவோரை மறுக்கும் முகமாக ஏதுவை வலியுறுத்துகின்றது. இவ்வுதாரணம்,

கொண்டு கூட்டு: இறைவன் காலத்தில் தாக்காது நின்று ஆக்காதே கண்டு நோக்காது நோக்கி நொடித்து அன்றே இன்று ஆம் கட்டு உளத்தில் கண்ட கனவு கண்ட நனவு உணர்வில் உணரக் கண்டவனில் இற்று.

இ-ள்: இறைவன் முதல்வன், காலத்தில் தாக்காது நின்று - இறந்த காலம் நிகழ் காலம் எதிர் காலமென வேறுபட்டு நின்று எல்லாத் தொழிலுஞ் செய்தும் விகாரமின்றி நிற்கும் காலதத்துவம் போல விகாரப்படாது நின்று, ஆக்காதே கண்டு - பிரபஞ்சத்தைக் கருவி கரணங்களாற் படையாது இ்்திவ்வாறாகுக வென வெண்ணும் சங்கற்பத்தாற் படைத்து, நோக்காது நோக்கி நொடித்து - அவ்வாறே காவாது காத்து அழியாது அழித்தலால், அன்றே இன்று ஆம் கட்டு - அந்த முதல்வனுக்குப் பந்தம் இன்றாதல் உளத்தில் - காற்று நூலிலுள்ள சொல்லும் அச் சொல்லாற் குறிக்கப்படும் பொருளும் உள்ளத்திற் தோன்றுங்கால் உள்ளம் அவற்றிற் கட்டுப்படாதவாறு போலும், கனவு கண்ட நனவு உணர்வில் உணரக் கண்டவனின் இற்று - கனவிற் கண்டவற்றைப் புறத்து விடயங்களைக் கண்டு வந்த நனவுணர்வில் விளக்கமாக அறிந்தவன் அப்பொருள் அவற்றிற் கட்டுப்படாதவாறு போலும் இத்தன்மைத்து எ-று.

சங்கற்பத்தாற் செய்வதால் செய்பவருக்குப் பந்தமின்றாகுமென்பதை விளக்குவதற்காக இவ்வெண்பாவில் இரண்டு உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.

i. கனவிற் கண்டதை நனவுணர்வில் விளக்கமாக அறிதல் துப்பாக்கியாற் சுடப்பட்டதாகக் கனவு கண்ட ஒருவன் விழித்தெழுந்து தான் கண்டது கனவென்பதை அறிந்த பின் சுடப்பட்டதற்காக வருந்துவதுமில்லை சூட்டுக் காயத்துக்கு மருந்து கட்டுவிப்பதுமில்லை.

ii. கற்ற நூற் சொல்லும் பொருளும் உள்ளத்தில் தோன்றுதல் ஒருவருக்குச் சிறைச்சாலையைப் பற்றிய எண்ணமோ அல்லது அழகிய பூஞ்சோலையைப் பற்றிய எண்ணமோ தோன்றினால் அப்போது அவர் அவற்றையடைந்து அனுபவிப்பதாக உணர்வதில்லை.

ஆக்குதல் - படைத்தல், காண்டல் .
நோக்குதல் - காத்தல்
நொடித்தல் - அழித்தல்

ஆக்காதே கண்டு நோக்காதே நோக்கி எனக் கூறப்பட்டமையினால், நொடியாதே என்பதை வருவித்து, நொடியாதே நொடித்தெனக் கொண்டு, அதற்கு அழியாது அழித்தலால் என உரை செய்யப்பட்டது.

முதலாம் வரியிலுள்ள 'அன்றே' என்பது அசை அதற்கு அநாதியே எனப் பொருள் கூறினும் பொருந்தும்.

காலத்தின் உளத்தின் கண்டவனின் என்னும் இடங்களிலுள்ள 'இன்' மூன்றும் உவம உருபுகள். அதனால் அவற்றுக்கு முறையே காலத்தத்துவம் போல உள்ளம் அவற்றிற் கட்டுப்படாதவாறு போலும், அறிந்தவன் அப்பொழுது அவற்றிற் கட்டுப்படாதவாறு போலும் என உரை செய்யப்பட்டது.

## தெரிந்ததும் தெரியாததும்

★ மஞ்சள், குங்குமம், ஆடு, பசு, வீணை, சந்தனம், தேன், நெய், கண்ணாடி, கோரோசனை, வலம்புரிச்சங்கு, இவைகள் வீட்டில் இருந்தால் பண வசதி தானாகவே வரும் என்பதோடு மகாலட்சுமியும் நித்தியம் வாசம் செய்வாள்.

★ மாதா, பிதா, குரு இந்த மூன்று பேர்களிடமும் உள்ள குற்றம் குறைகளை வெளியில் ஒருவரிடமும் சொல்லக்கூடாது. இது ஒரு பாவச் செயல் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

★ சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாழிகை இருக்கும் முன்பே எழுந்திருப்பது உத்தமம், மூன்றே முக்கால் நாழிகை இருக்கும்போது எழுந்திருப்பது மத்திமம், உதயக் காலத்தில் எழுந்திருப்பது அதமம்.

★ கன்றுக்குட்டியின் கயிற்றைத் தாண்டக்கூடாது. மழை பெய்யும் பொழுது ஓடக்கூடாது. தண்ணீரில் தன்னுருவத்தைப் பார்க்கக் கூடாது.

# SAIVA DOCTRINE FOR LIFE AS SHOWN BY APPAR ADIKAL

**Siddhantaratnam Dr. K.Ganesalingam**

B.Sc.(Eng.) C.Eng., M.I.E.E.(Lond), M.I.E. (Cey).

Continued From Last Issue....

Appar Adikal never went for pleasures of life. He says that this earthly life was worth taking to see the glorious form of Siva's manifestation as Nadarajah at Thillai. His great asset was his love of God. St. Sekkilar says that the Saiva Nayanmars, except worshipping him in love and devotion, never yearned even for the heaven (கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலினர்.)

The working spade of Appar Adikal once turned up to glittering gold and gem, from the earth. Not attracted by them, he threw them away. The celestial nymphs once danced before him and he only saw the manifestation of Lord Siva in them. Thus his mind was filled with thoughts of Siva, and he saw Siva in everything.

In this elevated state of seeing Siva in everything and everywhere, he never bowed to anyone. He says 'We are not subject to anyone'. Following the path of Appar Adikal, a Saivite cannot bow down to any one, as no one is superior to Siva who is our Lord. He should live with self - respect and honour.

Caste distinction was not prevalent earlier in Tamil Nadu. Saiva Religion never encouraged distinction by caste or creed. A saint of lower class was seen as worshipped by one of a higher class. Apputhy Adikal, a saint of the brahmin caste, was attracted by the good services of Appar Adikal and worshipped him. Appar had no consideration for caste or creed and was prepared to worship anyone if he is a devotee of Siva. He says, 'even if he is of a lower caste, who lives on the flesh of cow, if he is the devotee of Siva, he is the God whom we worship'.

## Worship of Minor Deities

Appar describes Siva as our king who by his very nature is not under the control of anyone (தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரன்) He says that he is our lord and we are always servile to him.

Saivites, who realises the greatness of Siva and accepted him as their supreme God, will not go behind minor deities. These deties and Devars are spiritually envolved souls in this world or celestial beings above. Devars, because of their good deeds or punniyams , find their position of enjoyment. They experience this state till they exhaust their good karma. Then they too come to earth and take birth to find their way to liberation. Sivagnana Siddhiyar explains this and says, ' whatever god we worship, it is Siva with Umai who comes in that form and bestows his blessings'. Worshipping minor deities is not only of no help to us, it often becomes an obstacle to our spiritual progress.

Appar Adikal saw Siva in everything. He saw him in the five elements of earth, water, air fire and space, and also in the soul and the sun and the moon. Aspect of Siva seen in these eight forms is called Attamoortham. In addition to this he saw Siva in these every male and female in this earth and also in the time periods of past, present and future. Thus he saw Siva everywhere, everytime and in everything.

Yet Appar Adikal had the firm conviction of worshipping only Siva. He discourages worship of minor deities saying ' we will not go behind minor deities; we are destined to attain the graceful feet of Siva ' ( சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம், சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்.) Even other Saiva Saints

discourage this.

Saivites of late are leading a mechanical life, with no knowledge of their religious and spiritual heritage.Instead of worshipping Siva, Umai, Vinayaga, Murugan, Bairavar, Veerapaththirar and the Siva Moorthams, they worship images unacceptable to Siva religion. Some Saiva priests, who are expected to guide the Saivites in their religious practice, are encouraging the worship of these deities, for personal gains. By worshipping these minor deities they are made to believe that a quick result can be obtained. Propaganda is done to this effect, even by missionaries, to allure the Saivites to alien faith. Out of a large number of people, say 10,000, going to such a place of worship, if only 10 people get some benefit, propaganda is made to belive that their prayer is answered. The ten people who got their prayer answered would have had the same result even if they didin't go to the temple. Out of the 10,000 people the balance 9,900 people got nothing and no one think of this,. Also even atheists get benefits without praying.Anyone who understands this will not be taken up by such propaganda.

## Eternal Slave

Saivism speaks of four kinds of relationship an aspirant has with Siva. They are satputra markam, saga markam, dhasa markam and gnana markam. These are relationships respectively between father and son, between comrades, between master and slave and guru and disciple. The relationship between husband and wife or lovers is not in the Saiva tradition. Whatever the relationship a spiritual aspirant has with God, in reality, he is an eternal slave to him. St. Sundaramoorthy says, 'I am the eternal slave of yours' (மீளா அடிமை உனக்கே ஆளாய்)

Appar Adikal had gone in this path of dhasa markam and always seen himself as a slave of Lord Siva. This attitude of his gave him the inner strength to stand fearlessly before any atrocity committed on him. He never lamented that God did not care for him or deserted him. He found peace and happiness in the worship tim fully believed in Siva's grace, which was always with him. In that blissful state and expectation Appar found work was worship. He advises us to worship Siva with onepointed attention and we will have no aliment (ஓன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை).

A Saivite should realise the valuable path shown by Appar and learn to lead a peaceful and contended life, All the positive qualities described above pertain to a Saivite who is an eternal slave of Saiva, the God Supreme, the king of kings.

The path of Appar Adikal shows Saivism as a doctrine of life. It is a path of freedom, honour, diginity and self - respect , which should be followed by every Saivite. This Saiva path is condensed in Appar Adikal's Thevaram as seen below:

*'we are not subject to (or controlled by) anyone. We do not fear Yama, the lord of death. We suffer not in hell. We are not to be deceived (or lead astray). We are not bewildered. We experience no illness. We are not to subservient. Always joyful, we have no sorrow. The Lord Sankaran who, by his very nature, is never under the control of anyone. He is wearing white conch ear studs. He is our Lord. We are always servile to Him. His twin freshly pluked flower - like russer feet, we are bound to reach.'*

நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கரவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளாஆளாய்க்
கொய்மலர்ச்சே வடிஇணையே குறுகினோமே.

# மௌனகுரு

பராசக்தி சுந்தரலிங்கம்

உங்களுக்கு நான் புதிதாக ஒன்றையும் சொல்ல முடியாது. நீங்கள் எல்லோருமே எங்களுடைய சமய தத்துவங்களிலே ஆழமான அறிவு உடையவர்கள். என்னை இன்று பேசும்படி கேட்டபொழுது, தட்சணாமூர்த்தி தத்துவத்தைப் பற்றிச் சிறிது உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைத்தேன்.

நாங்கள் எல்லோருமே உருவ வழிபாட்டில் நம்பிக்கை உடையவர்கள். எங்களுடைய சமயம் உருவ வழிபாட்டை ஏற்றுக் கொண்டுள்ளது. நாங்கள் கோயில்களிலே இறைவனின் எத்தனையோ திருவடிவங்களை வணங்கு கிறோம். ஆனாலும் இறைவன் உருவம் அற்றவன் என்பதும், இந்தத் திருவடிவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதும் எங்களுக்குத் தெரியும்.

நடராச தத்துவம் உலகத்தின் இயக்கத்தை விளக்கி நிற்கின்றது. இந்த அழகிய திருவடிவத்தைப் பார்த்து உலகமே வியந்து பாராட்டுகிறது. அதே போல குருவாக இறைவன் விளங்குவதை தட்சணாமூர்த்தி என்னும் அழகிய திருவடிவம் உணர்த்துகிறது. இவை இரண்டுமே எதிர் எதிரான இரண்டு நிலைகளைக் குறிப்பன. ஒன்று ஓய்வில்லாத அசைவு - ஆட்டம். மற்றையது எல்லாம் அடங்கிய மோன நிலை.

கொழும்பிலுள்ள பொன்னம்பல வாணேஸ்வரத்திலே ஓர் அழகிய தட்சணாமூர்த்தி இருக்கின்றது. இப்பொழுதும் அத்திருவடிவம் என் கண்ணுக்குள் நிற்கிறது. யாழ்ப்பாணத் திலுள்ள வண்ணை வைதீஸ்வரன் கோயிலிலும் தட்சணாமூர்த்தி வடிவம் ஒன்றுள்ளது. சென்னை கபாலீஸ்வரர் கோயிலிலும் ஓர் அழகிய வடிவம் உள்ளது. இவற்றைப் பார்த்து வணங்கியது ரசித்தது நினைவுக்கு வருகிறது.

சிவன் கோயில்களிலே தெற்குப் பக்கத்தைப் பார்த்தபடி தட்சணாமூர்த்தியின் திருவடிவம் இருக்கின்றது. தக்ஷிணம் அல்லது தட்சணம் என்றால் தெற்கு என்பது பொருள். தென்திசை காலனின் திசை என்பது ஒரு ஐதீகம். காலத்தை முடிப்பவன் - காலன். யம பயம் வேண்டாம் என்பது போல, தட்சணாமூர்த்தி அமைதியாக வீற்றிருக்கிறார்.

அந்த மூர்த்தியின் முகத்திலே சாந்தமான புன்னகை நிலவுகிறது. அவருடைய கை சின் முத்திரையைக் காட்டுகின்றது. அவர் ஓர் ஆல மரத்தின் கீழே வீற்றிருக்கிறார். அவருடைய காலடியிலே நான்கு பேர் அமர்ந்திருக்கிறார்கள். அந்தத் திருவடிவத்தைப் பார்த்த உடனேயே ஒருவர் குரு என்பதும் மற்றவர்கள் அவரிடம் உபதேசம் கேட்கும் சீடர்கள் என்பதும் விளங்கி விடும்.

இந்தக் குரு செய்யும் உபதேசம் ஞான உபதேசம். இந்த உபதேசத்திலே ஒரு விஷேசம் இருக்கிறது. குரு, வாய் மூடி, மௌனியாக இருந்து உபதேசம் செய்கிறார். வார்த்தைகள் இல்லாத உபதேசம். இது தான் இந்த உபதேசத்திலே உள்ள விஷேசம். மௌனமும் ஒரு மொழிதான். மௌனம் என்பது சொற்கள் கடந்த நிலை. மோனம் என்பது ஞான வரம்பு என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

**'செம்மான் மகளைத் திருடும் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான் இறவான்**
**சும்மா இருசொல் அறஎன் றலுமே**
**அம்மா பொருள்ஒன் றும்அறிந் திலனே.'**

என்று அருணகிரிநாதர் கந்தர் அனுபூதியிலே பாடுகிறார்.

சிவயோக சுவாமிகள் குருவருளால் ஞான நிலையை அடைகிறார். அப்பொழுது அவர் பாடுகிறார்.

**அருவமும் காட்டி**
**உருவமும் காட்டி**
**அப்பாற்கு அப்பாலாம்**
**அருள்நிலை காட்டிக் காட்டி**
**சும்மா இருக்கும் சூட்சத்தில்**

**மாட்டிவிட்டான்.**
**துன்பம் இறந்தன**
**இன்பம் இறந்தன**
**சோதி சோதி**
**சிவ சோதி**

"சும்மா இரு" என்றால் சொற்கள் அற்ற நிலை. "சொல் அற" என்பது அதன் பொருள். இது மௌனம் - ஆழ்ந்த மௌனம். மனதிலே ஒரு நினைவும் இல்லாமல் இருப்பது. மனம் என்றாலே நினைப்பது தானே அதன் தொழில். அது தான் எங்களுக்குத் தெரிந்த விளக்கம். இந்த நினைப்பு இல்லாத நிலைதான் "சும்மா இரு" என்பது. சுவாமிகள் "சும்மா இரு என்பதையே, தன்னைத் தேடி வரும் அடியார்களுக்குக் கூறுவது வழக்கம். என்பார்கள். இது ஒரு மாபெரும் உபதேசம் - ஒரு பெரும் தத்தவம்.

சாதாரண மக்களான எங்களைப் போன்றவர் களுக்கு மனதை வெறுமையாக, நினைவுகள் இல்லாமல் வைத்திருக்க முடியாது. எங்களுடைய மனம் அலைபாய்ந்தபடியே இருக்கும். ஆனால் ஞானிகளுக்குச் "சும்மா இருக்க" முடிந்தது.

**'சொல்லெல்லாம் மோனம்**
**தொழிலாதியும் மோனம்**
**எல்லாம் நன் மோன நிறைவே'**
என்று சுவாமிகள் சொல்கிறார்.

**'மௌனமாக இருந்து இளைப்பாறீர்'**
என்றும் சொல்கிறார்.

**'எண்ணம் யாவும் இறந்திட வேண்டும் என் குரு பரபுங்கவசிங்கமே'**
என்று குரு செல்லப்பாசுவாமிகளை வேண்டுகிறார்.

**'நினைப்பற நினைந்தேன்'**
என்று மணிவாசகப் பெருமான் பாடுகிறார்.

**'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது'**
என்று தாயுமான சவாமிகளும் பாடுகிறார். தாயுமான சுவாமிகளின் குருவின் பெயரே மௌனகுரு.

ரமணமகரிஷியைத் தரிசிக்கச் சென்றவர்கள், அவர மௌனமாக உபதேசித்தார் என்பார்கள். அவருடைய சந்நிதியில் தாம் இருந்தபொழுது பேசாமலே தங்களுக்கு உணர்த்தியவர், என்று தங்களுடைய அனுபவங்களை எழுதியிருக் கிறார்கள். சிவயோக சுவாமிகளைப் பற்றியும் பலர் இந்த வகையிலே எழுதியிருக்கிறார்கள். உங்களிலே பலரும் அவரோடு நேரடியாகத் தொடர்பு கொண்டவர்கள். இப்படியான மௌன அனுபவம் உங்களில் பலருக்குமே ஏற்பட்டிருக்கலாம். இந்தக் குரு சீட பரம்பரை எங்களுடைய சமய பாரம்பரியத்திலே வந்துள்ள ஒரு பெரிய கொடை - செல்வம் - முதுசம்.

ஞானிகள் இறையுணர்வைத் தங்கள் அகக்கண்களிலே அனுபவித்தார்கள். இந்த அனுபவத்தை அவர்கள் மற்றவர்களுக்கு வார்த்தைகளால் எடுத்துக் கூற முடியாது. கண்டவர் விண்டதில்லை. என்பதை அறிவோம். அந்த ஞானிகளை, அந்த அனுபூதிமான்களை - இறையுணர்வை அனுபவித்த அந்த மகான் களை நாங்களும் தரிசிக்கும் பொழுது, அல்லது அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்கும் பொழுது எங்களுடைய மனதிலே தெளிவு ஏற்படுகிறது. அவர்களைப் பற்றி நினைத்தாலே தெளிவு ஏற்படும் என்கிறார் திருமூலர். "தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே" என்பது அவரின் திருவார்த்தை.

"பிரம்மனாகவும், விஷ்ணுவாகவும், மகேஸ்வரனாகவும், அந்த பரப்பிரம்மனாகவும் குரு விளங்குகிறார்." என்ற சுலோகத்தை இப்பொழுது பாடினோம். மாதா, பிதா, குரு, தெய்வம், என்று சொல்வதை அறிவோம். இந்தக் குரு தத்துவத்தை விளக்குவது தான் தட்சிணாமூர்த்தி வடிவம், தத்துவம். இறைவனே ஆதி குரு - அந்த முழுமுதல் பொருள்.

பரஞ்சோதி முனிவர் தக்ஷிணாமூர்த்தியின் மீது ஓர் அழகிய தோத்திரம் பாடியிருக்கிறார்.

**கல்லாலின் புடை அமர்ந்து நான்மறை**
**ஆறங்கம் முதல் கற்ற கேள்வி**
**வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்**
**மறைக்கு அப்பாலாய்**
**எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை**
**இருந்தபடி இருந்து காட்டி**
**சொல்லாமல் சொன்னவரை நினையாமல்**
**நினைத்து பவத் தொடக்கை வெல்வாம்**

"சொல்லாமல் சொன்னவரே" அந்த குரு - இதுதான் மௌன உபதேசம். சீடர்களும் "நினையாமல் நினைத்தார்கள்" - அவர்கள் மறைகளை எல்லாம் கற்றவர்கள், அறிஞர்கள், ஆனால் ஞானத்தை குருவின் முன்னால் மனதை வெறுமையாக வைத்திருக்கும் நிலையைப் பெற்று, அந்தப் பூரணமான, சொல்ல முடியாத பொருளை உணர்ந்தார்கள்.

The knowable unknown, என்று சொல்வார்கள் The teacher spoke in silence and the disciples were freed from all doubts. Dakshinamoorthy was the first Guru of the universe.

அவர் காட்டும் சின் முத்திரை, மும் மலங்களிலிருந்தும் ஆன்மா விடுபட்டு இறைவனை அடைவதைக் குறிக்கிறது. இதையே அந்த ஆதி குரு சொல்லாமல் சொன்னார். சின்-சித், ஞானம்.

குரு கல்லாலின் கீழ் வீற்றிருப்பதற்கும் ஒரு காரணம் உண்டு. கல் ஆல் என்றால் அழிவற்றது என்பார்கள். சாதாரண ஆலமரம் அழியும். ஆலமரம் என்றால் விழுதுகள் இருக்கும். இதுதான் அதன் விஷேசம். கல் ஆல் என்றால் விழுதுகள் அற்ற ஆலமரம் என்ற குறிப்பை அறிய முடிந்தது. விழுதுகள் வேரூன்றி மரங்களாக மாறும். அவை மீண்டும் பிறக்கும். விழுதுகள் இல்லாத ஆலமரம் பிறப்பு அற்ற தன்மையைக் குறிப்பதாக இருக்கலாம். என்று தோன்றுகிறது.

'படலத் தொடக்கை வெல்வாம்'
என்பது பிறப்பை ஒழிப்பதாகும்.

பிறவிகள் எடுத்துக் களைத்துப் போனேன், **'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்எம் பெருமான்'** என்று மாணிக்கவாசகப் பெருமான் வருந்துகிறார்.

காரைக்காலம்மையார் **'மீண்டும் பிறவாமை வேண்டும்'** என வேண்டுகிறார்.

இந்தப் பிறப்பிலிருந்து விடுபடுவதுதான் மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கம். என்று எங்கள் சமயம் கூறுகிறது. To be freed from the cycle of births and deaths. இந்த விடுதலையை உணர்த்துவதுதான் தட்சணா மூர்த்தி தத்துவம்.

சிவயோக சுவாமிகள் இந்தத் தத்துவத்தை உணர்ந்தார். அப்படியே வாழ்ந்தார். அதையே உபதேசித்தார்.

**'ஓடவும் வேண்டாம் உலரவும் வேண்டாம்**
**பாடவும் வேண்டாம் பணியவும் வேண்டாம்**
**தேடவும் வேண்டாம் சிந்திக்க வேண்டாம்**
**சும்மா இருப்பதே சுகம்.'**
என்றார்.

இவ்வேளையிலே தாயுமானசுவாமிகள், திருச்சி மலைக்கோட்டையிலுள்ள தாயுமான சுவாமி கோயிலிலே வீற்றிருக்கும் தட்சணா மூர்த்தி மீது பாடிய ஓர் தோத்திரத்தைக் கூறி முடிக்கின்றேன்.

**ஐவகை யெனும் பூத மாதியை வகுத் ததனுள்**
**அசரசர பேதமான**
**யாவையும்வகுத்து நல் லறிவையும் வகுத்து மறை**
**ஆதி நூலையும் வகுத்துச்**
**சைவ முதலாம் அளவில் சமயமும் வகுத்து மேற்**
**சமயங் கடந்த மோன**
**சமரசம் வகுத்த நீ யுன்னை நான் அனுகவும்**
**தண்ணருள் வகுக்க இலையோ**
**பொய் வளரும் நெஞ்சினார்கள் காணாத காட்சியே**
**பொய் இலா மெய்யர் அறிவில்**
**போத பரிபூரண அகண்டிதா காரமாய்ப்**
**போக்குவர வற்ற பொருளே**
**தெய்வ மறை முடிவான பிரணவ சொரூபியே**
**சித்தாந்த முத்தி முதலே**
**சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே**
**சின்மயானந்த குருவே.**

இப்படி அந்தச் சின்மயானந்தத்தை, அந்த மௌனகுருவை வழிபடுகிறார்.

வணக்கம்

# நாவலர் பெருமான் சிரமேற் கொண்ட மேன்மைகொள் சைவநீதி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

**'இறைவன் பங்கயத்தயனுமாலறியா நீதி'** நீதி மந்திர சக்தி வாய்ந்தது. பாரதத்தில் நச்சுப் பொய்கை சருக்கமத்தில் வருவதொரு கதை, நீதியின் மந்திர சக்தியைக் காட்டுவது.

நாட்டிற் புகுந்த பாண்டவர்கள் வெய்யிற் கொடுமையாற் சோர்ந்து நீர் வேட்கையுற்று வருந்தினார்கள். நகுலன் ஓர் உயர்ந்த மரத்தி லேறி அயலிடங்களை நோக்கினான். தண்ணீர்த் தடாகம் ஒன்றைக் கண்டான். தானும் தாகம் தீர்த்து ஏனையோர்க்கும் நீர் எடுத்து வர எண்ணினான். தரும புத்திரரின் உத்தரவும் கிடைத்தது. கரையை அடைந்து நீரைப் பருக எத்தனித்த போது, 'இந் நீர் நச்சு நீர், என் காவலில் உள்ளது. அதனை உண்பையேல் உயிர் துறப்பை' என்று ஓர் அசரீரி ஒலித்தது. நகுலன் அதனைப் பொருட்படுத்தாது தாக மிகுதியினால் அந்த நீரை யுண்டு உடனே உயிர் துறந்தான்.

நகுலன் மீண்டு வராமையால், தருமர் சகாதேவனை அனுப்பினார். சகாதேவனும் அவ்வாறு மாண்டான். சகாதேவனும் மீண்டு வராமையால் தருமர் அர்ச்சுனனை அனுப்பினார். அர்ச்சுனனும் அவ்வண்ணமே மாண்டான். ஈற்றில் தருமர் வீமனை அனுப்பினார். அவனும் மாண்டான். வீமனை அனுப்பிய பின்னர் தருமர் களைப்பினால் அயர்ந்தே விட்டார். திடுக்குற்று எழுந்து பார்த்தார். நால்வரையும் காணவில் லை, ஆச்சரிய வசத்தரான தருமர், தானும் பொய்கைக் கரையை அடைந்தார். தம்பியர் நால்வரும் இறந்து கிடத்தலைக் கண்டு நெஞ்சம் புண்படக் கதறினார். இறந்தவர்கள் போலக் காணப்பட்டாலும் தம்பியர்களது முகங்கள் பிரகாசமாக இருப்பது கண்டு, இது யாது மாயமோ என்று சிரித்தார். 'இனி நான் இருந்து யாது பயன்? சகோதரர் சென்ற வழியில் தாமும் சென்று விடுதலே நல்லது.' என்று எண்ணியவராய், நீர்க்கரையை அடைந்தார். முன் போல அசரீரி ஒலித்தது. தருமர் அவ்வசரீரியை நோக்கி !நீ யார்?' என்றார்.

'யான் யஷன், நான் வினாவும் வினாக்களுக்கு விடை கூறுவாயானால், இந்த நீரை அருந்த விடுகிறேன்' என்றது. தருமர் நீ விரும்பியவற்றை யெல்லாம் வினவலாம் என்றார். அசரீரி ஒன்றன் பின் ஒன்றாகப் பல வினாக்களை வினாவியது. எல்லா வினாக்களுக்கும் சரியான விடையளித் தார் தருமபுத்திரர். இது கண்ட யஷன் மகிழ்ந்து எல்லா வினாக்களுக்குமே சரியான விடையளித்துவிட்டாய். நான் உனக்கு ஒரு மந்திரத்தை உபதேசிக்கின்றேன். அம்மந்தி ரத்தை உன் சகோதரரில் ஒருவரது செவியில் ஓதுவாயானால், அவன் மட்டும் உயிர்பெற்றெழு வான் என்றது. வீமனோ பெரிய பாக்கியசாலி; அருச்சுனனோ வீராதி வீரன்; வில்லுக்கு விஜயன். நகுல சகாதேவர்கள் மற்றொரு தாயான மத்திரையின் புதல்வர்கள்; சிறியவர்கள். இவர் களில் யாரை எழுப்புவது என்று எண்ணியவராய் ஒரு முடிவுக்கு வந்து, நகுலனின் காதில் மந்திரத்தை ஓத, நான்கு பேருமே நித்திரைவிட்டு எழும்புபவர்கள் போன்று எழுந்தார்கள். தருமருக்கோ பயம். ஒருவரைத் தானே அந்த மந்திரம் எழுப்பும். நால்வரையும் எப்படி எழுப்ப முடியும். மந்திரத்தை யான் முறைப்படி ஓத வில்லையோ என்ற பயம் தருமருக்கு ஏற்பட்டது. 'தருமபுத்திரரே அஞ்சற்க, உடன் பிறந்தவர்களை எழுப்ப எண்ணாமல், இன்னொரு தாயான மத்திரையின் பிள்ளையை எழுப்ப எண்ணிய உன்னுடைய நீதியே நால்வரையும் எழுப்பியது' என்று அசரீரி ஒலித்தது.

தரும புத்திரரின் நீதி இருந்தவாறு.

'மேன்மை கொள் சைவநீதி' என்பது நீதியில் சிவம் சிவகாசிப்பதைத் தெளிவுபடுத்து கின்றது.

'மேன்மைகொள் சைநீதி விளங்குக உலக மெல்லாம்' என்பது கந்த புராணம். ஒரு சமயம், தத்துவ ஞானி ஒருவர் நாவலர் அவர்களைச் 'சாதிமான்' என்றார். நான் திகைத்தேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் நாவலர் அவர்கள், சிவத்துவம் பிரகாசிக்கும் நீதியை விலகி நடப்பதில்லை. என்று விளக்கந் தந்தார். அப்பொழுது 'சாதி யிரண்டொழிய வேறில்லை' என்ற பாடல் நினைவுக்கு வந்தது. நீதிச் சாதி உயர்ந்தது.

மேன்மைகொள் சைவநீதியைக் கடைப்பிடித் தொழுகியவர் நாவலர் பெருமான். மதமாற்றத்திற்

கென்றே கங்கணங்கட்டிக் கொண்டு வந்தவர், பார்சிவல் பாதிரியார், பார்சிவலோடு பதிநான்கு வருடம் சேர்ந்து வாழ்ந்தவர் நாவலர் பெருமான்.

நாவலர் பெருமான் மேற்கொண்ட 'சைவநீதி' பார்சிவல் வந்த நோக்கத்தைத் தளர்த்தி விட்டது.

பார்சிவல் வேடங் களையாததோர் அபாரசாக்கியர் ஆயினார். நாவலர் பெருமானைக் காணுந்தோறும்.

**'மமகுரு'**

என்று உரக்கக் கூறிக் கைகூப்பி வணங்குவது அந்த வேடங்களையாத பார்சிவல் பாதிரியாருக்கு வழக்கமாயிற்று. 'மம' என்பதன் கருத்து 'எனது' என்பது.

நாவலர் தமது இருபத்தாறாம் வயதில் பார்சிவல் துரையை அரிதில் விலகிய சிறுகாலத்தின் பின், 'பார்சிவல்' துரையும் எக்காரணத்தினாலோ, பாதிரி உத்தியோகத்தைப் பரித்தியாகம் செய்துவிட்டு, சென்னைப் பட்டணம் போய், சென்னை பிரஸிடென்ஸிக் கல்லூரியில் ஒரு பண்டிதர் ஆயினார். அன்று, 'தினவர்த்தமானி' என ஒரு பத்திரிகையையும் நடத்திக் கொண்டிருந்தார். ஆனால் நாவலர் எப்படி, பண்டித உத்தியோகத்தைப் பரித்தியாகம் செய்த வழியும் தம்மிடத்து வைத்த அன்பைப் பரித்தியாகம் செய்யவில்லையோ, அப்படியே தாமும் பாதிரி உத்தியோகத்தைப் பரித்தியாகம் செய்த வழியும் நாவலரிடத்து வைத்த அன்பைப் பரித்தியாகம் செய்யாமலேயிருந்தார்.

ஆறுமுகநாவலர், பார்சிவல் துரை சென்னையில் இருக்குங் காலத்திலே, தமிழ் நாடு எங்குஞ் சஞ்சாரஞ்செய்து சைவப் பிரசங்க மழை பொழிந்தும், தமிழில் இன்றியமையாத சமய நூல்களையும் கருவி நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டும், ஆங்காங்குள்ள மடாதிபதிகளாலும், பிரபுக்களாலும், வித்துவான்களாலும் பாராட்டப்பட்டுத் தமக்கு இணையின்றி விளங்குவாராயினர். அது பார்சிவல் துரைக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியை விளைத்தது. அவருக்கு ஆனந்தம் பொங்கி வழிந்தது.

சென்னையிலே பெரிய சபைகளிலே நாவலரைப் பார்சிவல்துரை காணுஞ் சமயங்களிலெல்லாம் எழுந்து அஞ்சலி செய்து மமகுரு (எனது குரு) என்று உரத்துச் சொல்லி ஆசனங் கொடுத்து மரியாதை செய்வார். அளவு கடந்த அன்பின் மிகுதியினாலே நாவலர் ஊர் நன்மைக்காகப்படும் பிரயாசத்தைக் கண்டு 'தலைக்கு மேலே கை காட்டித் தமிழருக்காகக் கதறிக் கதறி மண்டை வெடித்துத் தாங்கள் சாவீர்கள்' என்று சாய மொழி போலச் சொல்லுவார்.

பார்சிவல் துரையைப் போலவே நாவலரும் அவரிடம் அத்தியந்த அன்புடையராய் அவரை ஒரு பெரிய மகானாக மனதிற் கருதியிருந்தார். என்பது அவரைப் பற்றி எழுதிய பகுதிகளிலிருந்து நன்கு தெரிகிறது. சைவதூஷண பரிகாரத்தில் பல விடயங்களில் பார்சிவல் துரைக்குப் பின் வந்த பாதிரியார் ஒருவரைப் 'பாதிரியே' என்று விளித்து எழுதிய நாவலர். பார்சிவல் பாதிரியாரின் பெயரைப் பேச்சிலோ, எழுத்திலோ, குறிப்பிடும் பொழுதெல்லாம் 'துரை' என்ற சிறப்புப் பெயரோடு சேர்த்து 'பார்சிவல்துரை' என்றே பேசுவார், எழுதுவார்.

நாவலர் நீதிமான் அவரை பண்டித மதன் மோகன் மாளவியா வழிபட்டதாக ஒரு சரித்திரம் உண்டு.

'யாழ்ப்பாணத்து நல்லூரிலே சென்ற நூற்றாண்டிலே, 'ஆறுமுக நாவலர்' என்கின்ற பெரிய அறிவாளி ஒருவர் இருந்தவர். அந்த நாவலர்எழுதிய கடவுள் என்ற பாடம் 'முதலாம் பால பாடம்' என்று ஈசான சிவாச்சாரியர் சொன்னார். உடனே பண்டித மதன் மோகன் மாளவியா எழுந்து இருகரங்களையும் சிரமேற் கூப்பி, யாழ்ப்பாணம் இருக்கும் திக்கு நோக்கி 'அந்த மகானுக்கு வணக்கம்' என்று மிக்க உருக்கத்துடன் வணக்கஞ் செய்தார். அதனைக் கண்ணுற்ற சிவாச்சாரியருக்கு உரோமஞ் சிலிர்த்தது; ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

மாளவியா சிவாச்சாரியரை நோக்கி, அந்த நாவலர் என்ற மகான் எழுதிய முதலாம் பால பாடம் இப்படியிருக்குமேயாயின், அவர் எழுதிய மற்றப் புத்தகங்கள் எப்படியிருக்கும் என்று வினவி, நாவலர் பெருமைகளையும், நாவலர் சரித்திரத்தையும், சிவாசாரியரிடம் கேட்டறிந்தார்.

நாவலர் பெருமான் சிரமேற் கொண்ட 'மேன்மைகொள் சைவநீதி' இருந்தவாறு.

நாவலர் குருபூசை நாவலர் பெருமான் கைக்கொண்ட சைவ நீதியை நினைவு கூருவிப்பதாக' என்று திருவருளைப் பிரார்த்திப்போமாக.

# சந்தேகம் தெளிதல்

விளக்கம் அளிப்பவர் : வாரணன்

"சந்தேகம் தெளிதல்" என்ற இப் பகுதிக்கு அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை எழுதி விளக்கம் பெறலாம்.

கேள்வி : ஆழ்கடலான், ரொறென்ரோ, கனடா.

"உரியா யுலகினுக் கெல்லாம்" என்று தொடங்கும் தேவாரத்தில் "ஏசுமா முண்டி யுடையாய் போற்றி" என்று ஒரு வரி வருகிறது. "ஏசுமா முண்டி என்பதன் பொருளைத் துலக்கமாகத் தெரிவிக்கவும்?

பதில் : முண்டி என்பது மழித்த தலையைக் குறிக்கும். இங்கே சதையற்ற மண்டையோட்டைக் (கபாலத்தைக்) குறிக்கிறது. சிவன் கபாலத்தைக் கையில் கொண்டு திரிபவன் என்பது புராணக்கதை. இது பிறர் இழித்துக்கொள்ளும் செயல். ஏசுமாறு - இழிக்குமாறு. பிறரால் இழித்துரைக்கக் கூடிய கபாலத்தை உடைய பெருங்கடவுள் என்பது "ஏசு மாமுண்டியுடையோய்" என விளக்கப்படுகிறது.

கேள்வி : அறிவழகன் ரொறென்ரோ, கனடா.

i. நடராசர், தட்சணாமூர்த்தி ஆகிய சில வடிவங்கள் சைவசித்தாந்தத்தில் எங்கு வருகின்றன?

ii. நடராசர் சிலையை வீடுகளில் வைக்க வேண்டாம் என்று கூறுகிறார்களே. ஏன்?

பதில் : i. இறைவன் உயிர்கள் உய்தியடையும் பொருட்டுப் பல வடிவங்களைக் கொள்கிறான். சிவமூர்த்தங்கள் என்று இவ்வடிவங்கள் கூறப்படும். இவற்றில் ஒவ்வொரு வடிவத்தையும் பற்றிய விளக்கங்கள் மெய்கண்ட சாத்திரங்கள் என்று கூறும் பதினான்கு நூல்களில் இல்லை. பொதுவகையால் அவன் கொள்ளும் இவ் வடிவத்தைப் பற்றிய குறிப்புக்களாகக் காணலாம். சுத்தமாயா தத்துவங்களைப் பொருந்தி அவன் பல்வேறு வடிவங்கள் கொள்கிறான். அவனின் கிரியா சக்தியும் ஞானா சக்தியும் சமமாகச் செயற்படும் நிலையில் சதாசிவ வடிவம், கிரியை மிகுந்து ஞானம் குறைந்த நிலையில் மகேசுர வடிவம், ஞானம் மிகுந்து கிரியை குறைந்த நிலையில் வித்தியேஸ்வர வடிவம் ஆகியன கொள்ளப்படுகின்றன என்று சைவசித்தாந்தம் விளக்குகிறது. இத்தகைய மூர்த்தங்களில் நடராச வடிவமும் தட்சணாமூர்த்தி வடிவமும் அடங்கும்.

இவ் வடிவங்கள் பற்றி விரிவான விளக்கங்கள் இல்லாது விடினும், சித்தாந்த நூல்களிலுள்ள கடவுள் வாழ்த்து முதலிய பகுதிகளில் சில குறிப்புக்களைக் காணலாம். மெய்கண்ட சாத்திர நூல்கள் பலவற்றை அருளிய சந்தானகுரவரின் பரம்பரையில் வந்த முதற்குரு கல்லால மரத்தின்கீழ் வீற்றிருந்த தட்சிணாமூர்த்தி என்பது கருதற்பாலது.

உண்மை விளக்கம் என்ற சித்தாந்த நூலில் நடராச தத்துவம் விளக்கப்படுகிறது. ஈழத்துக் கலாயோகி ஆனந்தக்குமாரசாமி எழுதிய உலகப் புகழ்பெற்ற "சிவனின் திருநடனம்" என்ற நூலுக்கு அடிப்படையாய் அமைந்தது இந்நூலில் உள்ள "தோற்றத் துடியதனில்" என்று தொடங்கும் பாடலே.

ii. ஆடும் பெருமான் நடராசரின் சிலையை வீட்டில் வைத்தால் வீடு ஆட்டங்கண்டுவிடும். தியானத்தில் இருக்கும் சிவனின் படத்தை வீட்டில் வைத்தால் வீடு களை இழந்துவிடும். இத்தகைய கருத்துக்கள் எல்லாம் சைவத்துக்கு எதிரானவர்களால் புனைந்துரைக்கப்பட்ட பொய்க் கதைகள். இவற்றை நம்பவேண்டியதில்லை. கலையழகு மிக்க நடராசரின் சிலையை வைப்பதால் வீட்டில் கலை வளரும். அழகு மிளிரும். அருள் கிடைக்கும்.

Registered as a NewsPaper at the G.P.O.

உ
சிவமயம்

(9)

# புத்தக விற்பனை

- விதியை வெல்வது எப்படி?
- திருவாசகம்
- Understanding Saiva Siddhanta Philosophy.
- And Outline of Saivism
- சைவத்தை அறியுங்கள்
- சிவபுராணம் விளக்கவுரை
- வள்ளுவம் வழங்கும் தமிழ் தத்துவம்
- உயர்வுமிகு சைவசமயம் உடன்பாடற்ற வழிபாடு (பிற அறிஞரின் கட்டுரைகளின் தொகுப்பு)
- தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு.கந்தையா
- ஈழத்துச் சித்த சிரோமணிகள்
- நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்

ஆகிய நூல்கள் விற்பனைக்கு உண்டு

**கிடைக்கும் இடம்:**

**சைவநீதி**

195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங் கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

**கலையரசி**

23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13.
தொ.பே: 2478885

## சைவநீதி மாத இதழ்

**பெறுமதி விபரம்**

தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி

*C. Navaneethakumar,*
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 2580458*

Regd No. QD/27/News 2005 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை (ஆட்டுப்பட்டித்தெரு), கொழும்பு - 13ல் அமைந்துள்ள கௌரி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.